# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 253 சனி, செப்ரெம்பர் 23, 2023 16 பக்கங்கள்




தியாகதீபம் **திலீபன்**
36வது
நிறைவாண்டின் நினைவில்...



தமிழீழத்திற்காக முதன் முதலில்
உயிரீகம் செய்த
அப்துல் ரவூப்பின்
தந்தை ஐயா
**அசன் முகமது**
அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி

## ஈஸ்டர் தாக்குதல்; சர்வதேச விசாரணைக்கு இலங்கை இணங்குமா?

அகிலன்



## கனடாவிடம் சிக்கியுள்ளதா இந்திய உறவு அமைப்பு?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



© 2023 இலக்கு இணையம்

## மக்கள் பெருமளவில் ஒன்று கூடுகின்ற மாற்றம் நடக்க வேண்டும்

**கலாநிதி க. சிதம்பரநாதன்**



இந்த மக்கள் அவர்களை சுற்றியுள்ள நிலைமையை புரிந்து கொள்ளாவிட்டால் அவர்களது எதிர்காலம் சூனியமாகி விடும். வருத்தப்படுகிறேன், வேதனைப் படுகிறேன், கவலைப்படுகிறேன் இந்த மக்கள் எழுச்சி பெற வேண்டும்.

"மக்கள் பெருமளவில் ஒன்று கூடுகின்ற மாற்றம் நடக்க வேண்டும்" இவை 1987 இல் தியாகதீபம் கூறிய வார்த்தைகள்... இவற்றை நினைவுபடுத்திய கலாநிதி க. சிதம்பரநாதன் தியாக தீபத்தின் தேசத்துக்கான அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சுருக்கமாக எடுத்துரைத்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தின் ஒருங்கிணைப்பில் புதன்கிழமை (20) மதியம் கைலாசபதி அரங்கில் "மீண்டெழும் பார்த்தீபம்" எனும்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

## இந்திய இராஜதந்திரிகளின் உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டன




கனடாவில் வைத்து காலிஸ்தான் விடுதலை அமைப்பு ஒன்றின்தலைவர் ஹாதீப்சிங்நிஜார் கடந்த ஜுன் மாதம் 18 ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான ஆதராங்களை கனடாவின் புலனாய்வுத்துறை இந்திய இராஜ தந்திரிகளின் உரையாடல் களை ஒட்டுக்கேட்ட தன் மூலம் பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை (18) கனேடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இந்தியா மீது காத்திரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளதாக தெரிவித்திருந்தார்.

தெரிவித்தது மட்டுமல்லாது கனடாவில் உள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றிய இந்தியாவின் வெளியக உளவு அமைப்பான றோவின் கனடாவுக்கான தலைவர் பவன்குமார் ராஜ் என்பவரையும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கனடா தெரிவித்திருந்தது.

கனடாவின் இந்த நடவடிக்கையை தொடர்ந்து இந்தியா வும் இந்தியாவில் உள்ள கனேடிய தூதரகத்தில் பணியாற்றிய இராஜதந்திரியை வெளியேற்றியிருந்தது. அது மட்டுமல்லாது கடந்த வியாழக் கிழமை (21) கனடா மக்களுக்கான நுழைவு அனுமதியையும் இந்தியா நிறுத்தியிருந்தது.

இதனிடையே, கனடாவின் விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைக்கவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதேசமயம் கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் விரிசல்கள் உள்ளதாக வெளிவந்த செய்திகளையும் அமெரிக்கா மறுத்துள்ளது.

## சர்வதேச நீதிப் பொறிமுறையினை வேண்டி திருகோணமலையில் போராட்டம்



சர்வதேச நீதிப்பொறிமுறையினை வேண்டி திருகோணமலையில் போராட்டம் ஒன்று வியாழக்கிழமை (21) இடம் பெற்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை காரியாலயம் முன்பாக இடம் பெற்ற குறித்த போராட்டத்தினை வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் இடம் பெற்ற போர் குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறையினை உறுதிப் படுத்துமாறு கோரியே இப்போராட்டம் இடம் பெற்றது.

பாலியல் குற்றங்களுக்கு உடன் சர்வதேச விசாரனை வேண்டும், நீதிப்பொறிமுறையை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## கஸ்மீர் விடுதலைக்கு போராடிய தலைவர் நான்கு வருடங்களின் பின் விடுதலை



இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள கஸ்மீரில் விடுதலைக்காக போராடிய மதத் தலைவர் மிர்வைஸ் உமார் பாரூக் நான்கு வருடங்களின் பின்னர் இந்திய அரசினால் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இந்திய அரசினால் காஸ்மீருக்கான சுயாட்சி அதிகாரத்தில் கணிசமாக அதிகாரங்கள் விலக்கிக்கொள்ளப் பட்டதை தொடர்ந்து பாரூக் உட்பட பல அரசியல் தலைவர்களை இந்திய அரசு வீட்டுக்காவல்களிலும் மற்றும் சிறைகளிலும் அடைத்திருந்தது.

அவ்வாறு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டவர்களில் பரூக்கும் ஒருவர். விடுதலைசெய்யப்பட்ட பாரூக் கடந்த வெள்ளிக்கிழமை(22) சிறீநகரில் உள்ள மசூதியில் தனது பூசை வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார். இதன்போது பெருமளவான மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

புதிய சட்டத்தை இந்தியா கொண்டுவந்த பின்னர் அங்கு புத்திஜீவிகள், வழக்கறிஞர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட பெருமளவான மக்கள் கைது செய்யப் பட்டிருந்தனர். மசூதிகளிலும் பல மாதங்களாக தொழுகைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனது அருமை மக்களே நான் உங்களை நான்கரை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## சட்டத்தை கையில் எடுக்கும் காடையர்களை கைது செய்ய வேண்டும்



எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை கையிலெடுக்க காடையர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு செவ்வாய்க்கிழமை(19) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

கடந்த காலங்களில் சிறுபான்மை சமூகத்தின் மீது அரங்கேறப் பட்ட அநியாயங்கள் போன்றே தியாக திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தின் மீதும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் இனவெறுப்பு தாக்குதல்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுச் செயலகத்திற்கு முன்பாக போராட்டம்

புதன்கிழமை (20) பிரித்தானியாவில் வெளிவிவகார அமைச்சுச் செயலகத்திற்கு முன்பாகச் சிங்கள இனவழிப்பு அரசின் கொடும் செயலைக் கண்டித்தும் அதனைப் பிரித்தானிய அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் நோக்கிலும் பிரித்தானியத் தமிழர்களால் போராட்டம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

மிகக் குறுகிய கால அழைப்பானது தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் விடுக்கப்பட்டு இருந்தது. கொட்டும் மழையில் போராட்டம் நிலைகுலையுமோ என்று இருந்த வேளை எமது மக்கள் கோபக் கனல் பொங்க அணிதிரண்டு நின்ற போராட்டக் களமானது, தமிழ்த் தேசிய உணர்வை எந்த சக்திகளாலும் அடக்கமுடியாது என்பதை மீண்டும் எடுத்தியம்பியது.

இன்றைய போராட்டமானது பிரித்தானிய அரசிற்கும் உலகிற்கும் தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வில், தமிழ் மக்கள் என்றும் உறுதியாகப் பயணிப்பார்கள் என்ற செய்தியை அழுத்தமாகச் சொல்லியுள்ளது.

இன்றைய போராட்டத்தில்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

## சிரியாவின் மீள்கட்டுமானத்திற்கு சீனா உதவி




பத்து வருடங்களுக்கு மேலாக மேற்குலகத்தின் தடையினால் நாட்டைவிட்டு வெளியேறாது இருந்த சிரியாவின் அதிபர் இந்தவாரம் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (22) சீன அதிபரை சந்தித்த சிரிய அதிபர் பசார் அல் அசாட் இரு தரப்பு உறவுகள் தொடர்பில் பேச்சுக்களை மேற்கொண்டதுடன், சிரியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா விரும்புவதாக சீனா அதிபர் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் மீள் கட்டுமானத்திற்கு சீனா உதவுவதுடன், வெளிநாடுகளின் தலையீடுகள், ஒரு தலைப்பட்சமான அழுத்தங்கள் போன்றவற்றில் இருந்தும் சிரியாவை பாதுகாப்பதற்கு சீனா உதவும் என சீன அதிபர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தின் மூலம் சிரியாவுக்கான உதவிகளை மேற்கொள்ள சீனா

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# அமைதி நினைவேந்தல் ஊர்தி மீது சிங்களக் காடையர்கள் நடாத்திய கொடூரத் தாக்குதல்; இலங்கையில் நல்லிணக்கத்திற்கு வாய்ப்பே இல்லை

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

**அமைதியான ஊர்திப் பவனியில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது அரசபுலனாய்வாளர்களால் ஏவப்பட்ட சிங்களக் கும்பல்கள் நடத்திய கொடூரத் தாக்குதல், இலங்கையில் நல்லிணக்கத்திற்கு வாய்ப்பே இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.**

ஈழத் தமிழ் மக்களுக்கு சமாதானத்தையும் நீதியையும் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த திலீபனை நினைவுகூரும் வகையில் அமைதியான ஊர்திப் பவனியில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் மீது சிங்களக் கும்பல்கள் நடத்திய கொடூரத் தாக்குதல், இலங்கைத் தீவில் அமைதியான சகவாழ்வுக்கு சிங்களவர்களால் இயலாது என்பதை மீண்டுமொருமுறை நிரூபிக்கிறது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியான செல்வராஜா கஜேந்திரனையும் இந்த கும்பல் இலக்கு வைத்து தாக்கு தல் நடத்தியுள்ளது. பொத்துவிலில் ஆரம்பமான இந்த அமைதியான ஊர்திப் பவனி, இலங்கை இராணுவம் மற்றும் துணைப்படையினரின் தூண்டுதலின் பேரில் வடக்கிற்கு செல்லும் வழியில் பல்வேறு இடங்களில் சிங்களக் கும்பல்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளது. தாக்குதல்களை நிறுத்துவதற்கு எதுவும் செய்யப்படவில்லை, சிங்களவர்களை மட்டுமே கொண்ட பொலிசாரின் மெத்தனப்போக்கு தாக்குதல் நடத்தியவர்களுக்கு மேலும் ஒத்தாசை வழங்குவது போல் அமைந்தது. இது ஒரு திட்டமிட்ட அரசபயங்கரவாதமாகவே தமிழ் அமைப்புகளால் பார்க்கப்படுகின்றது.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் தீவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்து வருகின்றன. இலங்கை பொலிசார் தாக்குதலை நிறுத்துவது போல் நாடகமாடிய நிலையில், அமைதியான முறையில் ஊர்திப் பவனி நடத்தியவர்கள் மீதான தாக்குதல், இலங்கை அரசாங்கமும் அதன் சிங்கள மக்களும் நல்லிணக்கத்திற்கு தயாரில்லை என்பதை நிரூபிக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் சர்வதேச சமூகமும் இத்தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய தருணம் இது, ஏனெனில் அவர்களின் 'நல்லிணக்கத்திற்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்கள்' தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தாக்குதலுக்கு உள்ளாக்கும் அதே வேளையில் சிங்களவர்களுக்கு தண்டனையில் இருந்து விலக்கப்படுவதற்கு மட்டுமே வழிவகுத்துள்ளன.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியமற்றது என்பதை ஐக்கிய நாடுகள் சபையும், இலங்கையில் நல்லிணக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேச அரசாங்கங்களும் உணர வேண்டிய நேரம் வந்துவிட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை நல்லிணக்கம் என்ற சொல் தீவில் தமிழ் இனப்படுகொலைக்கு மறைமுக ஆதரவு என்பதற்கு ஒத்ததாகும். ஈழத் தமிழ் மக்கள் ஒரே பதாகையின் கீழ் ஒன்றிணைந்து ஒடுக்குமுறையாளர்களிடம் இருந்து விடுதலைக்காகப் போராட வேண்டிய நேரம் வந்துவிட்டது. அவ்வாறு செய்யத் தவறினால், நடந்து வரும் இனப்படுகொலை நீடிக்கும்.

# சீனாவின் இந்தியா மேலான உளவு முயற்சிகளுக்கு

## ஊக்கமளித்து ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்க முயலும் சிறிலங்கா

இலங்கை விளையாட்டு வீரர்கள் உட்பட 12500 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றும 48 வகையான விளையாட்டுக்களை உள்ளடக்கிய 19வது ஆசிய விளையாட்டு விழா இன்று 23.09.23 இல் சீனாவில் ஆரம்பமாகின்றது இந்நிலையில் பத்து இந்திய விளையாட்டு வீரர்கள் இந்திய அதிகாரிகள் உடன் ஏற்கனவே விளையாட்டில் பங்குபற்ற சீனா சென்றுள்ளனர். இதற்கிடை அருணாசலப்பிரதேசத்தைச் சார்ந்த மூன்று வீராங்கனைகளுக்குச் சீனா விசா மறுத்ததினால் அதனை இந்திய வெளிவிகார அமைச்சின் பேச்சாளர் கண்டித்து அறிக்கை விட்டார். இதனை அடுத்து விளையாட்டுப் போட்டிக்கு விருந்தினராகச் செல்லவிருந்த இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாகூரின் சீன அழைப்பைச் சீனா விலக்கியுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் வெளியிட்ட கண்டன அறிக்கை தெரிவிக்கிறது.

அருணாசலப் பிரதேசத்தை தென்திபேத் எனத் தனதாக உரிமைபாராட்டும் சீனா அப்பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு விசா வழங்கினால் அது இந்தியப் பிரதேசம் என்பதை ஏற்கும் செயலாகி விடும் என விசா இல்லாமலே அப்பிரதேச மக்கள் சீனா வரலாம் என்னும் முறைமையைக் கையாள்வது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வரும் செயலாக உள்ளது. சீன இந்திய கூட்டுப்படைப் பயிற்சியில் கலந்து கொள்ளவிருந்த அருணாசலப்பிரதேச படை அதிகாரிகளுக்கும் சீனாவின் செங்டு நகரில் கடந்த யூலையில் நடைபெற்ற உலகப் பல்கலைகழக விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ளவிருந்த மூன்று அருணாசலப்பிரதேச வீரர்களுக்கும் இவ்வாறே சீனா விசா மறுத்தமை சீனா நடைமுறையில் அருணசலப்பிரதேசத்தைத் தனது இறைமைக்குட்பட்ட பகுதியாகவே கருதுகிறது என்பதைத் தெளிவாக்கி வருவதை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு தொடரும் சீன இந்திய எல்லைப்பிரச்சினை எந்நேரத்திலும் போராக மாறலாம் என்னும் சாத்தியக்கூறுகள் உள்ள நிலையிலேயே சீனாவின் ஷின் யான் 6' 750 கி.மீ தூரத்திற்கு துல்லியமாக வேவுபார்க்கக் கூடிய ஆய்வுக்ககப்பல் இலங்கை நோக்கி இந்திய அரசின் சிறிலங்காவுக்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பினையும் மீறி நகர்கிறது.

இந்தியாவின் ஸ்ரீஹரிகோட்டா விண்கல ஏவுதளம், கல்பாக்கம் அணுமின்நிலையம் தமிழ்நாட்டிலும் தெலுங்கு தேசத்திலும் உள்ள இராணுவ வான்படை ஆயுதக்கருவிகள் தளபாடங்கள் உற்பத்தி நிலையங்கள் தென்னிந்தியாவில் உள்ள ஆறு கடற்படைத்தளங்கள் ஆகியனவற்றை வேவுபார்க்கக் கூடிய வீச்சுக்குள் கொண்டுள்ள இக்கப்பல் இலங்கையை நோக்கிப் பயணித்து திடீரென இந்தியாவின் நிக்காபார் தீவுகளுக்கு அண்மையில் அனைத்துலக கடல் எல்லையில மெதுவாகப் பயணிக்கிறது இப்பகுதியில் அமைந்துள்ள கடலடி மலைத்தொடர்களை ஆய்வு செய்யும் நோக்கில் மெதுவான பயணத்தை அக்கடலடி மலைத்தொடர் மேற்பகுதி கடல் நீரில் தொடங்கியுள்ளது.

இந்த கடலடி ஆய்வினை ரஸ்யா 1940களில் மன்னார்கடலை அடுத்த பகுதிகளில் மேற்கொண்டுதான் இலெமூரியாக் கண்டக் கொள்கையை உருவாக்கி உலகின் முதல் மனிதன் ஈமத்தமிழக நிலப்பரப்புக்கள் ஒன்றாக இருந்த காலத்தில் தோன்றினான் என்பதை அறிவியல் ரீதியாகக் கண்டறிய முயன்றது.

இது ஏதேன் தோட்டத்தில் ஆதாம் என்னும் உலகின் முதல் மனிதன் தோன்றினான் என்னும் தொன்மத்தை மறுப்பதால் அதனை உண்மையாக்கவே சுமேரிய நாகரிகம் என்னும் ஆதித்தமிழரின் பரவல் நிலையில் தோன்றிய நாகரிக வளர்ச்சியை அதுவே தமிழர்களின் இந்தியத் துணைக்கண்ட குடிவரவுக்கான மூலமெனத் திட்டமிட்ட முறையில் மேற்குலகு அறிவாகத் திணித்தது.


தமிழர்களின் இறைமையின் தொன்மையும் தொடர்ச்சியும் அதன்வழி அவர்களின் தன்னாட்சி உரிமையும் உறுதியாவதைத் தடுக்க இந்திய அரசும் இரஸ்யாவின் இலெமூரியாக் கண்டம் குறித்த கடலடி ஆய்வுகளை 1940களிலேயே தடைசெய்ய உழைத்தது. இந்தியா தனது அரசியல் நோக்குக்காக எதனையும் செய்யும் என்பதற்கு உதாணரமாக இன்றும் கனடாவில் இந்தியா அங்கு அரசியல் புகலிடம் பெற்று வாழ்ந்து வந்த சீக்கிய தலைவர்களில் ஒருவரான ஹாதீப்சிங்கை கொன்றழித்துள்ள சம்பவம் கடந்த வாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

தியாக தீபம் திலீபனின் 36வது நினைவேந்தல் ஊர்தியைத் திருகோணமலை நோக்கிச் செல்லுகையில் தாக்கி உடைத்து தொடர்ந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனையும் தாக்கிக் காயப் படுத்தி சட்டத்தின் ஆட்சி தங்களதே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் தாம் நினைத்ததைச் செய்து பாராளுமன்ற சிறப்புரிமைகளையும் அவமதிப்போம் என்பதை வெளிப்படுத்திய சிங்களவர்கள் தங்களுக்கு இலங்கைத் தமிழர்களுடன் கூடிவாழும் மனநிலை இல்லை என்பதை மீளவும் நிரூபித்து இந்நிலையில் இந்தியா 13வது திருத்தத்தை எவ்வாறு தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு தொடக்கமாக்கப் போகிறது என்ற கேள்விக்கு இந்தியாவையும் அனைத்துலக நாடுகளும் அமைப்புக்களும் ஈழத்தமிழர்களின் வெளியகதன்னாட்சி உரிமையினை ஏற்காது ஏன் ஈழத்தமிழர்கள் சிங்களமக்களால் இனஅழிப்புக்கும் பண்பாட்டு இனஅழிப்புக்கும் உள்ளாகின்றார்கள் என்ற கேள்விக்கு உலகையும் பதிலளிக்க வைத்துள்ளார்கள் என்பதே இலக்கின் கருத்தாக உள்ளது.

தமிழர்கள் இலங்கையின் மூத்த மக்களினம் என்ற இந்த வரலாற்று உண்மைகளை இன்று ஈழத்தமிழர்களின் நிலத்தை பௌத்த மத விரிவாக்கத்தின் மூலம் ஆக்கிரமிக்கவும் ஈழத்தமிழர்களின் வாழ்வை சிங்களமொழி விரிவாக்கத்தின் மூலம் ஒடுக்கவும் முயலும் இன்றைய சிங்கள பௌத்த பெரினவாதிகளும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒருவார்த்தை கூட இலங்கையில் இனநல்லிணக்கம் குறித்துப் பேசாது பொருளாதார வங்குரோத்து நிலையில் நின்று காத்த இந்தியாவுக்கு ஒருவார்த்தைகூட நன்றி சொல்லாது அமெரிக்காவுக்கே நன்றி கூறி பேசிவிட்டு அமெரிக்க அபிவிருத்தி நிதி 19.2 மில்லியன் அமெரிக்க டொலரையும் இரந்து பெற்றுள்ள சிறிலங்காவின் இன்றைய அரசத் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், யாழ்ப்பாணத்தில் தியாகி திலீபனின் உண்ணாநோன்பு அறவழிப்போரின் பெயரையே கேட்க அஞ்சி நடுங்கி திருகோணமலையில் கோழைத்தனமாக நினைவு ஊர்தியையும் தாக்கி உடைத்து தொடர்ந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனையும் தாக்கி சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களுடன் கூடி வாழும் விருப்பு இல்லையென உலகுக்குத் தெளிவாக நிரூபித்து காயப்படுத்தி நீதிமன்றத் தடைகளைப் பெற முயன்று சட்டத்தின் முன் சிங்களவர்களுக்கே சிறப்பு முன்னுரிமை எனச் சட்டத்தின் ஆட்சி இல்லையென நிரூபித்து இறுதியில் நல்லூர் பிரதேசசபை அலுவலர் தியாகி திலீபனின் நினைவுச்சின்னத்துக்கு நிலம் கொடுத்தது கிரிமினல் குற்றம் எனத் தமிழ் அரசப்பணியாளர்களும் சிங்கள பௌத்தத்தை கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பாணியில் திலீபனுக்கு நினைவேந்தல் செய்வது சட்டவிரோதம் என முன்னெடுக்காவிட்டால் அவர்களும் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என எச்சரிக்க முயலும் பொலிசாரின் கீழ் கண்ணியமான வாழ்வைப் பெறுவது எப்படி என்ற கேள்விக்கு இந்தியாவைப் பதிலளிக்க வைத்துள்ளார்கள். அதே வேளை இந்தியாவைச் சீனா உளவு பார்ப்பதற்கு கூட அனுமதித்து அதே நேரம் இந்தியாவிடமும் நிதியும் அனைத்துலக ஆதரவுக்கான துணையும் பெறும் ரணில் அக்டோபர் மாதத்தில் சீனாவுக்கு உத்தியோக பூர்வமாகவும் செல்லவுள்ளார். இவ்வாறு எல்லா நாடுகளையும் தமது நலனுக்குப் பயன்படுத்தும் இராஜதந்திரத்தை ஈழத்தமழர்கள் ஏன் கடைப்பிடிக்கின்றார்கள் இல்லை என்பதற்கு ஈழத்தமிழர்கள் பதில் சொல்ல வேண்டுமென்பது இலக்கின் அடுத்த கேள்வியாக உள்ளது.

**ஆசிரியர்**

# பார்த்தீபப் பல்லாண்டு



புலர்கின்ற பொழுதொன்றில் மலரொன்று
விழிமூடி வாடிக்கிடந்தது,
வண்ண நிலவொன்று நிலம்மீதே ஒளியின்றிச்
சிலையாகச் சாய்ந்து கிடந்தது...

கடல்நின்ற அலையெல்லாம் கண்கலங்கித் தவித்துநின்று,
கடல்விட்டுக் கரையேறித் தீலீபமதன் தலைகோதத் தரைமீது
மோதியது...

உடல்கொண்ட மட்டும் உரங்கொண்ட மனதோடு
உறங்கிக்கிடந்திருந்து,
உண்மை ஒளி ஏற்றத் தன்னிகரில்லாத் தலைமகன்
தடங்கொண்ட பாதையிது...

எழுகின்ற அவன் மக்கள் அன்புக் குரல் கேட்டு,
எழுந்து வரமாட்டானா
எம் திலீபன் என்ற ஏக்கத் தணல் எரிமலையாய்ப்
பொங்கு தமிழ்
உரிமை மீட்கப் பல்லாண்டு கூறுதுமே!

-காந்தள்-

# ஈஸ்டர் தாக்குதல்; சர்வதேச விசாரணைக்கு இலங்கை இணங்குமா?

அகிலன்

இலங்கையை மட்டுமன்றி சர்வதேசத்தையும் அதிரவைத்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இலங்கை அரசியலில் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. இலங்கைப் பாராளுமன்றத்தில் இது குறித்து இரண்டு நாள் விவாதம் இடம்பெற்றுள்ளது. "சனல் 4" வெளியிட்ட காணொளிதான் ஈஸ்டர் தாக்குதலை மீண்டும் சூடான விவகாரமாக்கி இருப்பதுடன், உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீளெழுவதற்கும் காரணமாகியுள் ளது.




ஐ.எஸ். என்ற இஸ்லாமிய அரசுதான் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்துள்ளது என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கருத்தில் அதிரடியான மாற்றத்தை சனல் - 4 ஏற்படுத்திவிட்டது. பாதுகாப்பு மற்றும் புலனாய்வுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன், அரசியல் நோக்கத்தைக் கொண்ட சிலரும் - குறிப்பாக ராஜபக்ஷக்கள் இதன் பின்னணியில் இருந்துள்ளார்கள் என்ற சனல் 4 வெளியிட்ட கருத்து மக்கள் மத்தியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 21, 2019 அன்று, இலங்கையில் உள்ள மூன்று தேவாலயங்கள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் சிலவற்றை குறிவைத்து தொடர்ச்சியான ஒருங்கிணைந்த குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் 45 பேர் உட்பட 269 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தேசிய தவ்ஹீத் ஜமாத் (NTJ) என்ற உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாதக் குழுவால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களுக்கு இஸ்லாமிய அரசுக் குழு அப்போது பொறுப்பேற்பதாக அறிவித்தது. அந்த உரிமை கோரல் கூட சில நாட்களின் பின்னர்தான் வெளிவந்திருந்தது.

தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தனது சொந்த விசாரணையை நடத்தியது, ஆனால் சர்வதேச விசாரணைக்கு பரவலாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் விசாரணையை விமர்சிப்பவர்கள், அது முழுமையடையவில்லை என்றும், தாக்குதல்களில் தனது சொந்த பங்கிற்கு அரசாங்கம் பொறுப்பேற்கத் தவறிவிட்டது என்றும் கூறுகின்றனர். சர்வதேச விசாரணை அவசியம் எனக் கூறுபவர்கள் தமது கோரிக்கையை நியாயப்படுத்த இதனைத்தான் கூறுகின்றார்கள்.

2015 இல், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UNHRC) இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது அனைத்துத் தரப்பாலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணைக் குழுவை நிறுவியது. 2011 இல் வெளியிடப்பட்ட அந்தக் குழுவின் அறிக்கை, சித்திரவதை மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் செய்துள்ளதாக தெரிவித்தது.

ஈஸ்டர் தாக்குதல்களை விசாரிக்கவும் மனித உரிமைகள் பேரவை இது போன்ற ஒரு விசாரணைக்குழுவை நிறுவ முடியும். எனினும், அத்தகைய விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் சம்மதிக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அரசாங்கம் இதுவரை எதிர்த்துள்ளது, ஆனால் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகிறது. அதேவேளையில் உள்நாட்டிலும் ஆளும் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் அனைத்துமே சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

மனித உரிமைகள் பேரவை தவிர, மற்ற சர்வதேச அமைப்புகளும் ஈஸ்டர் தாக்குதல்களை விசாரிப்பதில் பங்கு வகிக்கலாம். உதாரணமாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) தாக்குதல்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது போர்க்குற்றங்கள் என்று கண்டறியப்பட்டால் அது குறித்து விசாரிக்க முடியும்.

இதனைவிட இலங்கை அரசாங்கம் தனது சொந்த விசாரணைக்கு உதவ வெளிநாட்டு நிபுணர்களை அழைக்கலாம். சர்வதேச புலனாய்வாளர்களின் நிபுணத்துவத்திலிருந்து இதன்மூலமாக பயனடையும் அதே வேளையில் விசாரணையின் கட்டுப்பாட்டை அரசாங்கம் பராமரிக்க அனுமதிக்கும். அதனால், சர்வதேசவிசாரணையைக் கேட்பவர்கள் இதனை விரும்பமாட்டார்கள்.



சர்வதேச விசாரணைக்கு ஆதரவாக பல வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. முதலாவதாக, உள்நாட்டு விசாரணையை விட சர்வதேச விசாரணை மிகவும் சுதந்திரமாகவும் பாரபட்சமற்றதாகவும் இருக்கும். இரண்டாவதாக, ஒரு சர்வதேச விசாரணையின் போது, பரந்த அளவிலான வளங்கள் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். மூன்றாவதாக, தாக்குதல்கள் பற்றிய உண்மையை வெளிக்கொணரவும், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவும் ஒரு சர்வதேச விசாரணையின் போதுதான் அதிக வாய்ப்புள்ளது.

ஆனால், சர்வதேச விசாரணை என்பது இலங்கையின் இறையாண்மையை மீறுவதாகவே இலங்கை அரசாங்கம் கருதும். சர்வதேச விசாரணை என்பது செலவு மிக்கதாகவும், அதிக நேரத்தைச் செலவழிப்பதாகவும் இருக்கலாம். மூன்றாவதாக, சர்வதேச விசாரணை இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு வழிவகுக்கலாம். இவை அனைத்தையும்விட முக்கியமாக இதனை ஏற்றால், போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையையும் இலங்கை ஏற்கவேண்டியிருக்கும். இலங்கை சர்வதேச விசாரணை ஒன்றை விரும்பாது என்பதற்கு இவை காரணங்களாகச் சொல்லப்படுகின்றது. சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இணங்குவது புலனாய்வாளர்களை அரசாங்கம் காட்டிக்கொடுத்துவிட்டது என்று அரசுக்கு எதிராக பேரினவாதிகள் குரல் கொடுக்கவும் காரணமாகலாம்.

உண்மையில், ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணையை நடத்த முடியும். அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு தேவை. சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்க அரசாங்கம் தயாராக உள்ளதாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்ய அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த வியாழன், வெள்ளிக் கிழமைகளில் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் இதனைத்தான் வலியுறுத்துகின்றன. அரசாங்கமோ பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றையும், மற்றொரு விசாரணை ஆணைக்குழுவையும் அமைப்பதன் மூலம் இந்தக் கோரிக்கைகளைக் கடந்து செல்ல முற்படுகின்றது.



சர்வதேச விசாரணை பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானது என்பது சர்வதேச சட்டவல்லுனர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. எதிர்காலத்தில் இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் தாக்குதல்களை தடுப்பதற்கும் இது அவசியமாகும். என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பதைக் கண்டறியவும், பொறுப்பான நபர்களை பொறுப்பேற்கச் செய்வதற்கும் சர்வதேச விசாரணை அவசியம். உள்நாட்டு விசாரணைகளின் மூலமாக இவை எதனையும் செய்ய முடியாது என்பதுதான் கடந்த 4 வருடங்களில் பெற்றுக்கொண்ட அனுபவம். சனல் 4 இந்தளவுக்கு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தவும் அதுதான் காரணம்.

அரசாங்கத்தின் முடிவைப் பாதிக்கக்கூடிய காரணிகள் சில உள்ளன. சர்வதேச விசாரணைக்கு இலங்கையில் கணிசமான உள்நாட்டு அழுத்தம் இருந்தால், அரசாங்கம் இணங்கிவர வாய்ப்புள்ளது. அதேபோல, இலங்கை மீது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சிங்கள மக்களின் மனப்போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை



**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயா்ந்த நாடுகளிலும் நினைவு கூரப்பட்டு வருகிறது. வழமைபோலவே இலங்கையில் இது ஒரு பதற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. கொழும்பில் நடைபெறவிருந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளையில், வடக்கு கிழக்கில் தடைசெய்ய வேண்டும் என்ற காவல்துறையினரின் மனுக்கள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. திருமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நடத்தப்பட்ட நினைவேந்தல் ஊா்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவை குறித்து அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருமலையிலுள்ள தென்கைலை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

## தென்கைலை ஆதீன குருமகா சந்நிதானம் செவ்வி

**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி மீது திருமலையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை எவ்வாறு நீங்கள் பார்க்கின்றீர்கள்?**



இது ஒரு ஆரோக்கியமான செயல் அல்ல இனங்களுக்கிடையே ஒரு பிணக்குகளை ஏற் படுத்துவதாகத்தான் இதனை நாங்கள் பார்க்கின்றோம். இது திட்டமிடப்பட்ட செயற் பாடாகவே நடைபெறுகின்றது ஏதோ ஒரு கார ணத்தால் இதனை திட்டமிட்டு செய்வதாக இதனை பார்க்க முடிகின்றது.

**சிங்கள மக்களுடைய மனப்போக்கில் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை என்பதை இது வெளிப்படுத்துகின்றதா?**

சிங்கள மக்களுடைய மனப்போக்கில் எந்தவித மாற்றம் வரவில்லை ஏற்கனவே இப்படித்தான் அவர்கள் இருந்து இருக்கிறார்கள் ஒரு சிலர் தங்கள் பொறுப்புக்களில் இருப்பதால் அவர்களது மனதில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டதாக நாங்கள் நினைக்கிறோம் ஆகவே மற்றவர்கள் அவர்களது கடும் போக்கு அடிப்படை சிந்தனை யில் அப்படியேதான் உள்ளனர்



**நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொட ர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்றது. அது ஏன் சாத்தியமாகவில்லை?**

பிரச்சனைக்கு உரிய சரியான ஒரு தீர்வை காண்பது கடினமாகத்தான் இருக்கும்

அந்தவகையில் சிங்கள தலைவர்களை பார்த்திங்கள் என்றால் புரியும் குறிப்பிட்டவர்கள் தமிழர்களுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற போது அவர்கள் எப்பவும் ஒன்று பட்டு செயற் படுவதுதை அவர்

அது உண்மை அதற்கு அரசியல் தலைவர்கள் இப்படியான பொது அமைப்புக்கள் அல்லது சமயம் சார்ந்தவர்கள் அறிக்கை வெளியிடும்போது அரசியல் தலைவர்கள் அதன் சார் கட்சியின் செயற்பாட்டாளர்கள் அது தொடர்பாக எந்தவொரு முன்னெடுப்புக்களையும் அணுகியதாக தெரிய வில்லை அப்படியான இணக்கப்பாடுகளை ஏற் படுத்தாத போது அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகத்தான் இருக்கும்

சில நேரம் சிலர் கேட்கிறார்கள் சம்மதம் கூறுகிறார்கள் ஆனால் அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுப்பதாக இல்லை ஆனால் சிலர் அந்த முயச்சியில் பங்குபற்றுவதும் இல்லை இப்படியான நிலையில் இவர்கள் இருக்கின்ற போது அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகத்தான் இருக்கிறது ஆனால் அவர்கள் முயற்சிக்க வேண்டும் ஆனால் அவர்கள் அப்படியான ஒரு பொது கட்டமைப்பிற்குள் வரவேண்டும் அப்படி அவர்கள் வராதபோது

பார்க்க முடியும் அந்த ஒற்றுமை தமிழ் தலைமை களுக்கு இல்லை ஆகவே இதனை அவர்கள் உணரவேண்டும் எதிர்கால சந்ததியினர் பற்றி சிந்திக்க வேண்டும் அப்படி சிந்தித்து ஒன்று படவேண்டும் அப்படி ஒன்று பட்டு சரியான ஒரு வடிவில் கொண்டு வராவிட்டால் இந்த பிரச்சனை காலம் காலமாக தொடர்ந்து கொண்டு இருக்கும்

**பொதுக் கட்டமைப்பு ஒன்றின் மூலமாக நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தும்போது இவ்வாறான விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தடுத்திருந்திருக்க முடியுமா?**

ஆம் இதில் ஓர் அளவு உண்மை இருப்பதாக நான் கருதுகிறேன் ஏன் எனில் தியாக தீபம் திலீபன் அவர்களது நினைவு தாங்கி உர்வலம் உணர்வு பூர்வமாக நடத்தப்பட வேண்டும் ஆனால் ஏன் அனைவரையும் ஒன்றுபடுத்தி இந்த நிகழ்வினை முன்னெடுத்து செல்வதற்கு அதற்கான ஏற்பாடுகளை ஏன் செய்யவில்லை என்பது புரியவில்லை.



ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் இருக்கின்றார் அவருக்கே இந்த நிலை என்றால் நாங்கள் இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயம் அதே போல் மீண்டும் மீண்டும் இது எமது மக்களது ஒற்றுமையை வலியுறுத்தி காட்டுகின்றது இதில் மக்களது அகிக பங்களிப்பு இருந்திருந்தால் மேலும் ஓர் அடுத்த கட்டத்திற்கு இதனை கொண்டு சென்றிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

• • •

# தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருக்கும் பலவீனத்தை சிங்களவர்கள் பயன்படுத்துகின்றனர்

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக பதற்ற நிலைமையொன்றை காண முடிகின்றது. குறிப்பாக தமிழர்களை இலக்குவைத்து பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலைமையினால் கிழக்கில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான் கடந்த பல மாதங்களாக பல விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தேன். கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடுகள் கிழக்கு தமிழர்களுக்கு ஆபத்தான நிலைமையினை ஏற்படுத்தப்போகின்றது, தமிழர்கள் பிரிந்து நிற்பது தமிழர்களுக்குப் பலவீனமானது என பல்வேறு தடவைகள் வலியுறுத்திவந்துள்ளேன். அந்த விடயங்கள் இன்று நடைபெறுகின்றன. கிழக்கில் தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கான பாரியளவிலான திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருக்கும் பலவீனத்தை பயன்படுத்தி இன்று கிழக்கில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் பாரியளவிலான தாக்கத்தினை எதிர்காலத்தில் செலுத்தும் என்பதை மறுக்கமுடியாத உண்மையாக இருக்கப்போகின்றது. இன்றைய இந்தப் பத்தியில் கிழக்கில் இன்று காணப்படும் பல்வேறு விதமான செயற்பாடுகளை சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கின்றேன்.



தமிழர்கள் ஒன்றுபட்டால் கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தமுடியும். தமிழர்கள் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் பல்வேறு வகையான நெருக்கடிகளை எதிர்கொள்ளமுடியும். ஒற்றுமையில்லாத செயற்பாடுகளே இன்று வடகிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கம் தலைதூக்குவதற்கான பிரதான காரணமாக அமைகின்றது.

இந்த நிலைமை இன்று கிழக்கில் காலூன்றும் நிலைமையினை தடுக்கவேண்டுமானால் முதலில் தமிழ் தேசிய சக்திகள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

அண்மையில் பொத்துவில் தொடக்கம் யாழ் வரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தூபி திருகோணமலைக்கு அண்மையாக வைத்து அடித்து நொருக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் நடவடிக்கையானது வெறுமனே உணர்வுரீதியாக கிளர்ந்தெழுந்த சிங்களவர்கள் தாக்கினார்கள் என்பது எல்லாம் ஏற்றுக்கொள்ளமுடியாத கதையென்று அனைவருக்கும் தெரியும்.

இது மிகவும் திட்டமிட்ட தாக்குதலாகவே கருதப்படவேண்டியுள்ளது. இந்த பேரணியானது பொத்துவில் பிரதேசத்தில் ஆரம்பமாகி திருகோணமலையினை நெருங்கும் வரையில் பல்வேறு இடங்களில் பல்வேறு அச்சுறுத்தல்கள் ஊர்திக்கு விடுக்கப்பட்டது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை, ஓட்டமாவடி பகுதியிலும் இதற்கான எதிர்ப்புகள் காட்டப்பட்டுள்ளன.



இப்பகுதியில் நின்ற புலனாய்வாளர்களினால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அங்கு நின்று எதிர்ப்பினை வெளிப்படுத்தியவர்கள் இராணுவ புலனாய்வுப்பிரிவுக்காக கடமையாற்றுவோர் என்பது அனைவருக்கும் தெரியும். அதில் ஒருவர் ஜோசப் பரராஜசிங்கம் கொலைவழக்கில் பிள்ளையானுடன் கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்தவர். இவ்வாறானவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பது என்பது ஏதோ ஒரு குழப்பத்தினை ஏற்படுத்துவதற்கு என்பது அனைவருக்கும் தெரியும்.

கிழக்கில் தமிழர்களின் உரிமைசார்ந்த போராட்டங்களானாலும் தமது தியாகங்களானாலும் சரி அதனை அனுஸ்டிப்பதற்கான உரிமையினை மறுக்கும் நிலைமையே காணப்படுகின்றது. எனினும் நாங்கள் நிலைமையினை உணர்ந்து கிழக்கில் செயற்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். கிழக்கினைப்பொறுத்த வரையில் ஒன்றுபட்டு மேற்கொள்ளும் போராட்டங்கள் மட்டுமே வெற்றிபெறும் சந்தர்ப்பங்கள் அதிகளவில் கிழக்கில் காணப்படுகின்றன.



குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் அனைவரும் இணைந்து முன்னெடுத்த போராட்டம் என்ற காரணத்தினாலேயே மாபெரும் வெற்றியைப் பெற்றது. பல்வேறு தடைகள் கிழக்கில் அதற்கு ஏற்படுத்தப்பட்டபோதிலும் அத்தனை தடைகளும் உடைக்கப்பட்டு போராட்டம் வெற்றியடைந்தது. அந்த போராட்டத்தில் தமிழ் தேசிய பரப்பில் செயற்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் பங்கேற்றன.

தமக்குள் முரண்பாடுகள் காணப்பட்டாலும் நோக்கம் பொதுவானது என்ற காரணத்தினால் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தினை முன்னெடுத்ததன் காரணமாக தடைகள் இலகுவாக துடைத்தெறியப்பட்டு கொண்டுசெல்லப்பட்டது. பெரும்பான்மையினத்தவர்களே குறுக்கிடுவதற்கு அச்சப்படுமளவுக்கு போராட்டம் வீரியம்கொண்டதாக மாறியது.

இதனை முன்னுதாரணமாக கொண்டு கிழக்கில் போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் அனைத்து தமிழ்தேசிய சக்திகளையும் ஒன்றுதிரட்டி இவ்வாறான எழுச்சி நிகழ்வுகளை முன்னெடுக்கவேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது இவ்வாறான நிகழ்வுகளை தனியாக செய்து தமது அரசியல் ஸ்திரத்தை மட்டும் நோக்காக கொண்டு செயற்படுவது பொருத்தமான செயற்பாடாக ஏற்றுக்கொள்ளமுடியாது.



தியாக தீபம் திலீபன் என்பவர் தியாகத்தின் முழுவடிவமாகவுள்ள நிலையில் அவரது தியாகத்தினை வெறுமனே நாங்கள் அரசியல் ரீதியாக மட்டும் நோக்காமல் ஒட்டுமொத்த வடகிழக்கு தமிழர்களின் தேசிய அபிலாசையாக மாற்றுவதற்கான செயற்பாடுகளையே மேற்கொள்ளவேண்டும்.

இதேபோன்று இன்று மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக்கான போராட்டம் மட்டக்களப்பில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. ஒன்பதாவது நாளையும் தாண்டிய வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மயிலத்தமடு, மாதவனை பகுதியில் பல ஆண்டுகாலமாக பரம்பரையாக மேய்ச்சல்தரைகாணியாகபயன்படுத்தப்பட்டுவந்த நிலத்தினை சிங்கள பேரினவாத சக்திகள் அபகரித்து முன்னெடுத்துவரும் காணி அபகரிப்பு அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்தும் தமது மேய்ச்சல் தரை காணிகளை மீட்டுத்தருமாறு கோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

2500க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்வாதாரத்தினை இழந்து நிற்கின்ற நிலையில் இந்த சூழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மட்டக்களப்பின் எல்லைப்பகுதியில் மிகவும் மோசமான நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அப்பகுதியில் தமிழர்கள் யாரும் செல்லமுடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் அப்பகுதிக்கு சென்ற மதத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் அப்பகுதியில் எந்த தமிழர்களும் செல்லமுடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே தமது காணிகளை மீட்டுத்தருமாறு கோரி அப்பகுதியை சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் போராடி வருகின்றனர். தற்போது விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் தமது கால்நடைகளை மேய்ப்பதற்கான இடமில்லாத நிலையில் கால்நடை பண்ணையாளர்கள் பெரும் கஸ்டங்களை எதிர்கொண்டுவரும் நிலையில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மயிலத்தமடுவில் நடப்பதென்ன?

துரைராசா ஜெயராஜா

மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டிப் பகுதியில் கடந்த 17 ஆம் திகதியிலிருந்து மயிலத்தமடுவில் கால்நடைப் பண்ணைகளை வைத்திருக்கும் பண்ணை உரிமையாளர்கள், தொழிலாளர்கள், கிராம மக்கள் இணைந்து தொடர்போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர். மட்டக்களப்பு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின்



எல்லையில் உள்ள தங்களது மேய்ச்சல் தரைப் பிரதேசமான மயிலத்தமடு, பெரியமாதவனைப் பரப்பில் தொடரும் சட்ட விரோத குடியேற்றம் தடுக்கப்பட்டு மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத் தருமாறுகோரி நடத்தப்படும் இந்தத் தொடர் போராட்டத்தில், தமிழ் தேசிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள், கிராம சபைகளைச் சேர்ந்தவர்கள், விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

### மயிலத்தமடு கால்நடைப் பண்ணைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப்பெரிய மேய்ச்சல் தரையைக்கொண்ட நிலப்பரப்பு மயிலத்தனைஆகும். 900 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த மேய்ச்சல் தரையில் பல தலைமுறைகளாகத் தமிழர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பரந்த வெளியாகவும், இயற்கையாக, கால்நடைகள் உண்ணக்கூடிய புற்கள் முளைத்து வளர்வதனாலும், காட்டு விலங்குகளிடமிருந்து இலகுவில் பாதுகாப்பைத் தரக்கூடிய விதத்தில் இவ்வெளி காணப்படுவதனாலும் இந்தப் பகுதியில் தமிழர்கள் கால்நடைப் பண்ணைகளை அமைத்துள்ளனர். இங்கு கிட்டத்தட்ட 250000 நாட்டுக் கால்நடைகளுக்கு உரித்துடைய 978 தமிழ் பண்ணையாளர்கள் உள்ளனர். இவர்களில் மூவர் முஸ்லிம் கால்நடைப் பண்ணையாளர்கள் ஆவர்.

### மைத்திரி ஆரம்பித்து வைத்த வன்முறை

1995 ஆம் ஆண்டுவரைக்கும் இந்தப் பகுதியில் தமிழர்கள் எவ்வித அச்சுறுத்தல்களுமின்றி, கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா காலத்தில் விவசாய அமைச்சராக இருந்தவரும், நல்லாட்சி என்று தங்களைத் தாங்களே கூறிக் கொண்ட அரசாங்கத்தின் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகாவின் காலத்தில் விவசாய அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். அவரின் ஆளுகையின் கீழ் இருந்த மகாவலி அபிவிருத்தி அதிகார சபையைக் கொண்டு, மயிலத்தமடு, பெரியமாதவனை ஆகிய மேய்ச்சல் தரைகளின் குறிப்பிட்ட பல ஏக்கர் நிலத்தை அபகரித்தார். அப்பகுதியில் சிங்கள குடியேற்றங்களைச் செய்யவும், தமிழ் பண்ணையாளர்களின் காணிகளை பொலநறுவை பகுதிச் சிங்களவர்களுக்கும், அம்பாறையில் குடியேற்றப்பட்டிருந்த சிங்களவர்களுக்கும் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டார். ஆயினும் இப்பகுதியில் இடம்பெற்ற போர் நிலைமைகள் காரணமாக அந்த செயற்றிட்டத்தை அவரால்வெற்றிகரமாகச்செய்யமுடியாது போனது. அதேவேளை தமிழ் பண்ணையாளர்களும் அங்கு தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியாது போக, கால்நடைகளோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தரவைப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். போர் முடிவுற்றதும் தமிழ் பண்ணையாளர்கள் மீளத் திரும்புகையில் அங்கு மைத்திரியின் கனவு நனவாகியிருந்தது. நாலா பொலநறுவை, அம்பாறை எல்லைக் கிராமங்களின் பக்கமாகக் காடுகளை அழித்து சிங்கள குடும்பங்களை குடியேற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனவே அன்றிலிருந்து இதற்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் பண்ணையாளர்கள்தற்போது, தொடர்ப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

### தமிழ் பண்ணையாளர்கள் அனுபவித்த இன்னல்கள்

1995 ஆம் ஆண்டு தொடக்கம் இங்கு கால்நடை மேய்ச்சல் வேலைகளில் ஈடுபடும் பண்ணையாளர்கள், தொழிலாளர்கள் சிங்கள பேரினவாத அரச படைகளினாலும், இனவாத சிங்களவர்களாலும் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வந்திருக்கின்றனர். இதுவரை பதிவு செய்யப்பட்டவகையில், இப்பகுதியில் கால்நடை மேய்ப்பிற்காக சென்றவர்களில் 75 பேர் காணாம லாக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது? யார் கடத்தினார்கள்? இப்போது உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா போன்ற எந்தக் கேள்விகளுக்கும் யாரிடமும் பதிலில்லை. தமது உறவுகளைத் தொலைத்த குடும்பத்தினர் ஒவ்வொரு காணாமலாக்கப்பட்டோர் போராட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கின்றனர். அதேபோல மயிலத்தமடு, பெரியமாதவனைப் பகுதிகளில் மாடு மேய்க்க சென்றவர்கள் பிணமாகவும், முண்டமாகவும் கண்டெடுக்கப்பட்ட கதைகள் இப்பகுதியில் ஏராளமாகவே உண்டு. அந்தக் கொலைகளுக்கு எந்தக் கணக்கும் இல்லை. யார் கொன்றார்கள் என்பதற்கும் சாட்சியமில்லை.

இவ்வாறு தமிழர்களை மாத்திரம் இலங்கை அரச படைகளும், இனவாத சிங்கள குடியேற்றவாசிகளும் கொன்றொழிக்கவில்லை. மாறாக வாய்பேசாத சீவன்களான கால்நடைகளை வெட்டியும், உயிரோடு வைத்து எரித்தும், தலைகளை, கால்களை அறுத்தும் கொன்று போட்டிருக்கின்றனர். மாடுகள் மேய்வதற்காக இயற்கையாக முளைத்திருக்கும் புல்வெளியை கோடைகாலத்தில் தீயிட்டு எரித்துவிடுவதை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றனர். அந்நிலத்தில் மழை பெய்து புற்கள் பச்சைப்பசேல் எனக் காட்சி தரும் காலத்தில், இரவுகளில் பல உழவு இயந்திரங்களில் வருகைதந்து, அந்நிலம் முழுவதையும் உழுதுவிட்டுச் செல்வதை ஒரு வேலையாகச் செய்யும் இனவாதச் சிங்களவர்கள்தான் இந்தப் பகுதியில் தற்போது குடியேற்றப்பட்டிருக்கின்றனர். இந்த அநியாயங்கள் எல்லாம்போக, பல லட்சக்கணக்கான கால்நடைகளை இறைச்சிக்காகக் களவாடிச் சென்றிருக்கின்றனர். இதனைக் கையும்மெய்யு மாகப் பிடித்த தமிழர்களைக் காடுகளில் கட்டிவைத்துத் தாக்கியிருக்கின்றனர். அந்தக் கால்நடைக் கொள்ளையர்கள் தாக்கியதன் பின்னர், சிறிலங்கா பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்து, மீளவும் சிறையிலடைத்து சித்திரவதை செய்திருக்கின்றனர்.

### நாட்டு மாடுகளின் அழிப்பு

சிறீலங்கா முழுவதிலும் கிட்டத்தட்ட 550000 நாட்டு கால்நடைகள் (மாடுகள் மட்டும்) உள்ளன. இவற்றில் 250000 நாட்டு மாடுகள் மயித்தனை, பெரியமாதவனை பண்ணைகளில் வளர்க்கப் படுகின்றன. நாட்டின் பால் உற்பத்தியில் பெருமளவு பங்கினை இந்தப் பண்ணையின் உரித்தாளர்களாகிய தமிழர்கள் வழங்குகின்றனர். எவ்வித ஊக்கநலத் திட்டங்களையும் இந்தப் பண்ணையாளர்களுக்கு வழங்காத அரசு, கடந்த வருடம் பெருமளவு கால்நடைகள் நோயினால் அழிவுற்றபோதும் கூட எவ்வித



உதவித் திட்டங்களையும் இவர்களுக்கு வழங்கவில்லை. பண்ணைகளை அபகரித்து, இந்த நாட்டுக் கால்நடை வளர்ப்பை அழிக்கவே அரசு முயற்சித்து வருகின்றது. அதற்குப் பிரதான காரணமே, தமிழர்களிடம் இவ்வளவு பெருந்தொகையான நாட்டு மாடுகளும், பால் உற்பத்தியினால் கிடைக்கும் பொருளாதார பலமும் இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே. இந்நாடு என்றுமில்லாத வகையில் பொருளாதார சிதைவுக் குள்ளாகியிருக்கின்ற இவ்வேளையில், அரிதான வளமாக மிஞ்சியிருக்கும் கால்நடை வளர்ப்பை அழிக்க அரசு முன்நிற்கிறதெனில், தமிழர்களைப் பொருளாதார ரீதியாக அழித்துவிடவேண்டும் என்பதற்காகவே. இவ்வாறான பொருளாதாரச் சிதைவையும், சிறர் ஊட்டச்சத்தின்மையையும் எதிர்கொள்ளும் வேறெந்த நாடாவது நாட்டு மாடுகள் பாரியளவில் அழிந்து போவதை செய்யுமா? நாட்டு மாடுகளுக்குரிய இயற்கைப் பண்ணைகளை திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்குப் பயன்படுத்துமா? ஆனால் சிறீலங்கா மட்டும் அதனைச் செய்யும். ஏனெனில் இந்தப் பண்ணைகள் தமிழர்களுடையவை.

### பௌத்த பிக்குவின் அச்சுறுத்தல்

அண்மைக்காலமாக அப்பகுதியில் குடியேறியிருக்கும் பௌத்த பிக்கு ஒருவர், சில சிங்கள காடையர்களையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு பெரும் அச்சுறுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றார். பௌத்த விகாரைகளே இல்லாத இந்தப் பண்ணை வெளியில் பௌத்த மடாலயம் ஒன்றினை அமைத்து அவ்விடத்தில் புத்தர் சிலைகளையும் வைத்துள்ளார். இவ்வளவு அநியாயங்கள் நடந்திருப்பதை ஊடகங்களோ, சிவில் சமூகப் பிரதிநிதிகளோ, அரசியல்வாதிகளோ சென்று பார்வையிட முடியாதளவுக்கு வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றார். அவருக்குத் துணையாக அவருடன் சிங்கள காடையர்களும் காவலுக் கிருக்கின்றனர்.

ஆக, இத்தனை அநீதிகளுக்கு எதிராகவும் தான் மயிலத்தமடு, பெரிய மாதவனை பண்ணையாளர்கள் போராடத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு இந்நாட்டு அரசினாலோ, அரச நீதி கட்டமைப்பினாலோ எவ்வித நீதியும் கிடைக்கப் போவதில்லை. எனவே இதற்கும் வேண்டும் சர்வதேச கவனிப்பே. • • •

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

# International Crimes

## பகுதி 03

### போர்க்குற்றங்கள்

போரில் ஈடுபடும் தரப்புகள் செய்யும் குற்றங்கள் என்னவாக இருக்கும் என்பது எம்மிடையே பொதுவாக எழும் கேள்விகள் தான். ஆனாலும் ஈழத்தமிழர்களின் வாழ்வனுபவத்தில் போர்க்குற்றமாக கண்களின் முன் என்றும் நிழலாடுவது கண்களும் கைகளும் கட்டப்பட்டு நிர்வாணமாக்கப்பட்ட போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் சிலரை பிடரியில் சுட்டுக் கொல்லும் சிறீலங்கா இராணுவத்தின் காணொளியும் தலைவரின் மகன் பாலச்சந்திரனுக்கு விசுக் கோத்துகளை உண்ணக் கொடுத்ததும் பின் அந்தக் குழந்தை இறந்து கிடப்பதுமான காணொளிகளே.



அவை போர்க்குற்றங்கள் தான். ஆம். ஆரம்பத்தில் நாம் அவற்றைப் போர்க் குற்றங்களாக ஏற்றுக்கொண்டாலும் அக்கொலைகளுக்குப் பின்னாலிருக்கும் நோக்கம் இனப் படுகொலைக்கானது என்பதை பின்னொரு கட்டுரையில் நாம் பேசிக்கொள்வோம்.

ஆக மேற்சொன்ன இரண்டு விடயங்களும் போர்க்குற்றங்கள் தான் என நாம் உணர்ந்து கொண்டுள்ள போதும் அதனை அறிவுசார்ந்து போர்க்குற்றமாக பொதுவெளியில் பேசுவதற்கு எமக்கு தேவையான அறிவைப்பற்றி இனித் தொடர்வோம்.

போர்க்குற்றங்கள் என்றால் என்ன என்பதை ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபின் அகவிதி 8 இன் பிரகாரம்:

"பன்னாட்டு மற்றும் உள்நாட்டு ஆயுத முரண்பாடுகளின் போது பிரயோகிக்கத்தக்க சட்ட நடைமுறைகளையும், மரபையும் உடைத்தெறிந்து அவற்றை மீறும் நடவடிக்கைகள் அனைத்தும் போர்க்குற்றங்கள்" என வரையறுத்துக் கொள்ளலாம்.

போர்க்குற்றங்களை வரையறுப்பதில் மேலும் தெளிவான விளக்கமொன்றை ஹென் கேர்ட்ஸ் டோஸ்வால்ட் தருகின்றார்.

"பன்னாட்டு மனிதாபிமானச்சட்டத்தினை போர்க் குற்றங்கள் தீவிரமாக மீறுவதனால் பாதுகாப்பு வழங்கப்பட்ட மானுடனினதும், பொருட்களினதும் மீதான பாதுகாப்பை கேள்விக் குறியாக்கும் அல்லது மானுடப் பெறுமதியினை அறவே அற்றுப்போகச்செய்யும் செயல்கள் போர்க்குற்றங்கள்" என்கிறார் அவர்.

இதன்படி பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களினை மீறும் பொழுதே போர்க்குற்றங்கள் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறாயின் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் போர்களின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் வகுத்திருக்க வேண்டும் அல்லவா?

1864ஆம் ஆண்டில் போர்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக முதற்கட்டமாக உலகலாவிய பேச்சுக்கள் எழுந்தன. அவை செயலுருப்பெற்று மேலும் தேவைக்கேற்ப புத்தாக்கப்பட்டு ஜெனீவாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பன்னாட்டு நடைமுறை வரைபும் அதன் மேலதிக இணைப்புக்களான நெறிமுறைகளும் போர்க்குற்றங்களை இரண்டு வகையாகப்பிரித்து நோக்கின. அவை முறையே:

1. **பன்னாட்டு ஆயுத மோதல் குற்றங்கள்**
2. **பன்னாடல்லாத (உள்ளநாட்டு) ஆயுத மோதல் குற்றங்கள் என்பனவாகும்.**



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள் பொத்தக ஆசிரியர், பட்டய முகாமைக் கணக்காளர்

பன்னாட்டுப் போர்களின் போது பன்னாட்டு மனிதாபிமானச் சட்டத்தை மிகத் தீவிரமாக மீறி நிகழ்த்தப்படுகின்ற குற்றங்கள் "மாபாதக விதிமீறல்" என்றசிறப்புச்சொல்லாடலால்ஜெனீவா நடைமுறை வரைபு வெளிப்படுத்தியுள்ளது. பாதுகாக்கப்பட்ட மனிதன் மற்றும் ஆதனங்களின் மீது நிகழ்த்தப்படும் அவ்வகை மாபாதக விதிமீறல்களாக -

1. **வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் கொலைகள்**
2. **மனிதாபிமானமற்ற பராமரிப்பு, சித்திர வதைகள், மற்றும் உயிரியல் ஆயுதப் பரீட்சிப்பு**
3. **உளநிலை மற்றும் மனிதவுடல் மீது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் படுகாயங்கள், தாங்கொணாத் துன்பப்படுத்துதல்கள்.**
4. **ஆதனங்களை சட்டத்திற்கு புறம்பாகக் கையகப் படுத்தல், அழித்தல்.**
5. **போர்க்கைதிகளையும், பாதுகாக்கப்பட்ட மக்களையும் கைதிகளாக்கி பணிக்கமர்த்துதல்.**
6. **போர்க்கைதிகளையும், பாதுகாக்கப்பட்ட மனிதர்களையும் நீதிப்பொறிமுறைக்கு உள்ளாக்கும் உரிமையை வேண்டுமென்றே மறுத்தல்.**
7. **சட்டத்திற்கு புறம்பாக இடம்பெயர்த்தல், இடமாற்றுதல் மற்றும் வலுக்கட்டாயமாக தடுத்து வைத்தல்.**
8. **பிணைக்கைதிகளாக்குதல்.**

இவற்றிற்கு மேலதிகமாக மேலும் இருபத்தைந்து யுத்த மீறல்கள் பன்னாட்டு ஆயுத மோதல்களின் போது குற்றங்களாக கொள்ளப்படத்தக்கவை என ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபு வகைப் படுத்தியுள்ளது.



பன்னாட்டுப் போர்கள் அல்லாத (உள்நாட்டு) ஆயுத மோதல்களின் போது போர்க் குற்றங்களெனக் கருதத்தக்க நான்கு பிரதான விடயங்களை ஜெனீவா பன்னாட்டு நடைமுறை வரைபு வகுத்துள்ளது.

அவையாவன:

1. **மனித வாழ்விற்கும், மனிதனுக்கும் எதிரான தாக்குதல்கள். விசேடமாக எல்லா வகையான கொலைகள், குரூர நடத்தைகள், சித்திரவதைகள் மற்றும் அங்கவீனப்படுத்துதல்.**
2. **மானிடப்பண்பிற்கு ஒவ்வாதவையும், அருவருக்கத்தக்க வையுமான செயல்களைச் செய்யத் தூண்டுதல்.**
3. **பணயக் கைதிகளாக்குதல்**
4. **நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்காத தடுத்து வைத்தல் மற்றும் கொல்லும் தண்டனைகளைப் பிரயோகித்தல்.**

ரோம் நடைமுறைவரைபானது உள்நாட்டுப் போர்களின் போது நிகழும் யுத்த மீறல் களில் பின்வரும் குற்றங்களைத் தீவிரமான போர்க் குற்றங்களாகக் கருத வேண்டும் என வரையறுத்துள்ளது.

1. **போர் நடவடிக்கைகளில் ஈடுபட் டிராத குடிமகன் அல்லது பொதுமக்கட் தொகுதியொன்றின் மீது உள்நோக்கத்துடன் மேற் கொள்ளப்படும் தாக்குதல்கள்.**
2. **பொதுமக்கள் பாவிக்கும் கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், மருத்துவமனைகள். பொருட்கள் மற்றும் ஜெனீவா வரைவுக்கமைவாக விசேட குறியிடப்பட்டவற்றின் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கம் கொண்ட தாக்குதல்கள்.**
3. **போர்ப் பிரதேசத்திலுள்ள மக்களைப் பாதுகாப்பதற்காக பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்களின் அங்கத்தவர்கள், வாகனங்கள் மற்றும் அவர்களுக்கு சொந்தமானவற்றின் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கமுடைய தாக்குதல்கள்.**
4. **இராணுவ நிலைகளென கொள்ளப்படாத சமய நிலையங்கள், கல்வி நிலையங்கள்,**

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# சிதைக்கப்படும் செறிவுகள்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத்துறையின் எதிர்காலம் தொடர்பில் நிலையற்ற வெளிப்பாடுகள் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றன. 2050 ம் ஆண்டளவில் பெருந்தோட்டத்துறை இல்லாமல் போகும் அபாயம் மேலோங்கி காணப்படுவதாகவும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையானது தோட்டங்களை நம்பிவாழும் தொழிலாளர்களுக்கு பாரிய தாக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக அமையும். எனவே தொழிலாளர்கள் தோட்டத் தொழிற்றுறையை மட்டுமே நம்பிக் கொண்டிருக்காமல் மாற்றுத் தொழிற்றுறை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவையும் மேலெழுந்துள்ளது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் கணிசமான வகிபங்கினைக் கொண்டவர்களாக மலையக மக்கள் விளங்குகின்றனர். பெருந் தோட்ட தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று பல துறைகளிலும் மலையகத்தவர்கள் ஈடுபட்டு இலங்கைக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றார்கள். அதிலும் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் பங்களிப்பு சற்று அதிகமாகவே உள்ளதையும் இங்கு குறிப்பிட்டாதல் வேண்டும். மேற்கண்ட துறைகளில் பெண்கள் நெருக்கீடுகள் பலவற்றையும் சந்தித்து வருகின்றபோதும் அவர்களின் உழைப்பு அதிகமாகவே காணப்படுகின்றது.



இலங்கையின் தேசிய வருவாயில் கூடிய ஆதிக்கத்தை தேயிலை ஒருகாலத்தில் செலுத்தி இருந்தது. இதனடிப்படையில் 1959 இல் இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின்பங்கு59.6வீதமாகஅமைந்திருந்தது. இது 1969 இல் 57.8, 1976 இல் 43.6, 1980 இல் 35.1, 1985 இல் 33.1, 1987 இல் 25.9, 1989 இல் 24.3, 1990 இல் 24.9 என்ற வீதத்தில் அமைந்திருந்தது. இதில் பெருந்தோட்டத்துறையும் அதிகளவில் செல்வாக்கு செலுத்தியது. 1995 இல் 168.8 மில்லியன் கிலோகிராம் தேயிலை பெருந்தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104 மில்லியன் கிலோகிராமாக அமைந்திருந்தது.

தேயிலை உற்பத்தி பரப்பினைப் பொறுத்தவரையில் 1980 இல் கண்டி, நுவரெலியா,பதுளை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, குருநாகல், கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் 211,256 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. இதே வேளை 2002 இல் இம்மாவட்டங்களில் 193,925 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில்1980 இல் 39,930 எக்டேயர் பரப்பிலும், 2002 இல் 50,266 எக்டேயர் பரப்பிலும் தேயிலை உற்பத்தி இடம்பெற்றிருந்தது. இதேவேளை 1924 இல் இலங்கையில் 169,285 எக்டேயர் பரப்பில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றதோடு 92,354,128 கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

### வீழ்ச்சிப் போக்குகள்

இலங்கையின் தேயிலை ஏற்றுமதியினை நோக்குகையில் 2013 இல் ரஷ்யா உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு 68.39 வீதமான தேயிலை ஏற்றுமதி இடம்பெற்றது. இதேவேளை ஆசிய நாடுகளுக்கு 8.12 , ஐரோப்பிய நாடுகளுக்கு 4.00, ஆபிரிக்க நாடுகளுக்கு 6.30, அமெரிக்கா,கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு 2.16, ஏனைய நாடுகளுக்கு 11.03 வீதமான தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்திருந்தது. 1990, 2000, 2010 ஆகிய ஆண்டுகளிலும் ரஷ்யா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கே இலங்கை அதிகளவான தேயிலையை ஏற்றுமதி செய்திருந்தது.



தேயிலை உற்பத்தி, தேசிய வருமான ஈட்டல் என்பவற்றில் பெருந்தோட்டங்கள் ஆதிக்கம் செலுத்திய நிலைமாறி பின்னாளில் சிறுதோட்டங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றது. இந்நிலைக்கு காணிப்பகிர்வில் எம்மவர்கள் புறக்கணிக்கப்பட்டமை, சிறுதோட்ட அபிவிருத்தியில் அரசாங்கம் காட்டிய அதீத கரிசனை, சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு பசளை மானியங்கள் மற்றும் கடன் வசதிகள் எனப்பலவும் பெற்றுக் கொடுக்கப்பட்டமை போன்ற பல நிலைமைகள் சிறுதோட்டங்களின் எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. இதனால் சிறுதோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு உற்பத்தியிலும் சிறுதோட்டங்கள் முன்னிற்கத் தொடங்கின. 1983 இல் இலங்கையின் மொத்த தேயிலை நிலப்பரப்பில் 75,769 எக்டேயரில் சிற்றுடைமைகளின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. எனினும் சிற்றுடைமைகளின் தேயிலை பரப்பு பின்வந்தகாலங்களில் படிப்படியாக அதிகரித்தது. இதற்கேற்ப 1994 இல் 76,569 எக்டேயர், 2005 இல் 118,274 எக்டேயர், 2014 இல் 132,335 எக்டேயர் நிலப்பரப்பில் சிறுதோட்ட உரிமையாளர்களின் தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. 1970 களில் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் மட்டுமே சிறுதோட்ட உரிமையாளர்களாகக் காணப்பட்டனர் எனினும் தற்போது நான்கு இலட்சத்து இருநூறுக்கும் அதிகமான சிற்றுடைமையாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் 88.16 வீதமானவர்களுக்கு ஒரு எக்டேயருக்கும் குறைவான தேயிலைக் காணிகள் இருப்பதாகவும் தகவல்கள் வலியுறுத்துகின்றன. தோட்டங்கள் கம்பனியினருக்கு கைமாறியதன் பின்னர் தோட்டத்துறையில் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வருவதாகவும், தொழிலாளர்களின் நலன்கள் தொடர்பிலோ அல்லது தோட்டத் துறையின் அபிவிருத்தி தொடர்பிலோ எவ்விதமான கவனமும் கம்பனியினரால் செலுத்தப்படுவதில்லை என்றும் பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதும் நீங்கள் அறிந்ததேயாகும். இதனால் தொழிலாளர்கள் அதிருப்தியுடன் பணியாற்றி வருவதாகவும், இன்னும் சில தொழிலாளர்கள் தோட்டத் தொழிற்றுறையில் இருந்தும் விலகிச் சென்றுள்ளதாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதனால் தேயிலை பெருந்தோட்டங்களில் பதிவு செய்திருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டது. 1980இல் 541,971 தொழிலாளர்கள் தேயிலை பெருந்தோட்டங் களில் பதிவு செய்து கொண்டிருந்தனர். எனினும் 2015 இல் இவ்வெண்ணிக்கை 158,322 ஆக வீழ்ச்சி கண்டது. இந்நிலையில் சமகாலத்தில் இவ் வெண்ணிக்கையில் மேலும் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளமையும் தெரிந்ததாகும்.

எனினும் தொழிலாளர்கள் கம்பனியினரின் நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படும் கண்டனத்தை கம்பனி தரப்பினர் மறுதலித்துப் பேசியுள்ளனர். 'நெருக்கடியான காலகட்டத்திலும் தொழிலாளர்களின் நலன்களில் நாம் அக்கறையுடன் செயற்படுகின்றோம். ஆனால் கம்பனிகள் தொழிலாளர்களுக்கு மேலும் இன்னல்களையும் நெருக்கடிகளையும் தருவதாக விஷமத்தனமான பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்தபோதும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் இருபது இலட்சமாகும். இத்தனை பேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை நாம் மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே கொண்டு நடத்துகிறோம். 150 வருட வேதன முறையை மாற்றியமைக்க வேண்டுமெனவும் வருமான பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களிடம் கோரினோம். ஆயினும் அவர்கள் அதுகுறித்து அக்கறை செலுத்தவில்லை.

### கல்வி ஈடுபாடு



கொவிட் தாக்கம் மற்றும் இரசாயன உர இறக்குமதி தடை காரணமாக தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. 2020 இல் 300 மில்லியன் கிலோகிராம் தேயிலையை உற்பத்தி செய்த நாம் 2022 இல் 251 மில்லியன் கிலோகிராம் தேயிலையையே உற்பத்தி செய்துள்ளோம். எனினும் தொழிலாளர்களின் நலன்களில் மாற்றங்கள் இல்லை' என்று

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# திலீபனின் நம்பிக்கையும் இந்தியாவின் நம்பிக்கைத் துரோகமும்..



திலீபனின் மரணத்தை ‘ஈடு இணையற்ற உயிர்க் கொடை’ என்று சொல்வதைவிட, ஈவிரக்கமற்ற படுகொலை என்று சொல்வதுதான் பொருத்தம். அண்ணல் காந்தியின் அகிம்சைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகத் தம் பட்டமடிக்கிற இந்தியத் துணைக்கண்டம், தன்னுடைய ஆணவத்தாலும் அகம்பாவத்தாலும் தன்முனைப்பாலும், லட்சக்கணக்கான மக்களின் கண்ணெதிரில் அந்த இளைஞனைச் சிறுகச் சிறுகச் சாக விட்டது.

அந்தச் சமயத்தில், ஈழத் தமிழரின் தாய்மண்ணில் நின்றுகொண்டிருந்த இந்திய அமைதிப்படையின் தலைவர் ஹர்கிரட்சிங், இந்த உண்மையை மனசாட்சியோடு அம்பலப்படுத்தினார்.

1987 செப்டம்பர் 17ம் தேதி, திலீபனின் அறப்போர் தொடங்கிய மூன்றாவது நாளே, உயரதிகாரி தீபிந்தர் சிங்குக்கும், இலங்கைக்கான இந்திய ஹைகமிஷனர் தீட்சித்துக்கும் ஹர்கிரட்சிங் அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பினார். “மூன்றாவது



நாளாக உண்ணாவிரதம் நீடிக்கிறது. இதற்குப் பிறகு திலீபனின் உடல்நிலை மோசமடையக் கூடும். அவரைக் காப்பாற்றுவது முக்கியம். திலீபனைக் காப்பாற்றத் தவறினால், அமைதிப்படைக்கு எதிராகத் தமிழ்மக்கள் திரும்பிவிடக்கூடும்” என்று குறிப்பிட்டதோடு நில்லாது, பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதையும் சுட்டிக் காட்டினார்.

“ஊர்க்காவல் படையினருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட வேண்டும்... பயங்கரவாத தடைச் சட்டத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் 1300 தமிழர்களையும் பேரம் பேசிக் கொண்டிருக்காமல் விடுவிக்க வேண்டும்... இடைக்கால அரசின் பொறுப்பிலேயே நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்...” – என்பன உள்ளிட்ட ஹர்கிரட் சிங்கின் யோசனைகள் அனைத்துமே, திலீபனின் கோரிக்கைகளிலிருந்த நியாயத்தை எடுத்துச் சொல்வதாக இருந்தன.




Mr J.N. Dixit with the LTTE Supremo Pirabakaran and Maj. Gen. Harkirat Singh, GOC IPKF after the conference on 26 September 1987.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தீட்சித் மீண்டும் சந்தித்தால் கருத்துவேறுபாடுகள் அகன்றுவிடும், திலீபனையும் தீட்சித் சந்திக்க வேண்டும் – என்றெல்லாம் ஹர்கிரட்சிங் வலியுறுத்தினார். தீட்சித் அதற்கு மறுத்துவிட்டார்.

திலீபன் உயிர்துறந்தபிறகான சூழலை ஹர்கிரட் சிங் அளவுக்கு இந்தியத் தரப்பில் புரிந்துகொண்டவர்களும், யதார்த்தத்தை வெளிப்படையாகப் பேசியவர்களும் மிகச் சிலரே!

“திலீபனைப் பார்க்க நல்லூர் வாருங்கள்.... திலீபனைச் சந்தித்துப் பேசுங்கள்... என்று மீண்டும் மீண்டும் தீட்சித்தை வலியுறுத்தினேன்... அவர் அந்தச் சந்திப்பைத் தாமதப்படுத்தினார். கடைசியில், திலீபன் இறந்த அன்று தான் பலாலி வந்தார்....! திலீபனை நாம் காப்பாற்றியிருக்க வேண்டும். இந்தியாவால் அந்த உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும்” என்கிற ஹர்கிரட்சிங்கின் ஒவ்வொரு வார்த்தையும் அவரது மனத்துயரை எடுத்துக் காட்டுகின்றன. கூடவே இந்தியாவின் அதிகாரத் திமிரையும் எடுத்துக் காட்டுகின்றன.

‘இந்திய அமைதிப்படை மீது புலிகளும் தமிழ் மக்களும் நம்பிக்கையிழக்கக் காரணம் திலீபனின் மரணம் தான்...” என்று வேதனையுடன் குறிப்பிட்டார் ஹர்கிரட்சிங். அது, தாக்குதல்



இயக்குனர்
புகழேந்தி தங்கராஜ்

நடத்தச் சென்ற ராணுவமல்ல, அமைதியைக் காப்பாற்றுவதற்காகச் சென்ற ராணுவம். அந்தப் பொறுப்புணர்வோடுதான், அந்தப் படையின் தலைவரான அவர் பேசினார். அதற்கு நேர்மாறாக இருந்தது, அவருக்கு மேலிருந்த அதிகார வர்க்கம். அமைதி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அது உறுதியாக இருந்தது.

திலீபனின் அறப்போர் தொடங்கிய மறுநாளே, செப்டம்பர் 16ம் தேதி, பிரபாகரனை நேரில் சந்தித்தார்கள், ஹர்கிரட் சிங், தீபிந்தர்சிங் உள்ளிட்ட அமைதிப்படை உயரதிகாரிகள். பலாலி விமானதளத்துக்கு இந்திய விமானப்படை ஹெலிகாப்டரில் அவரை அழைத்துச் சென்றனர். கொழும்பிலிருந்து பலாலி தளத்துக்கு வந்த இந்திய ஹைகமிஷனர் தீட்சித்துக்கும் பிரபாகரனுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை நம்பிக்கையூட்டுவதாக இருக்க, ஹர்கிரட்சிங் உள்ளிட்ட பொறுப்புள்ள அதிகாரிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

இருதரப்புக்கும் இடையிலிருந்த பல முட்டுக்கட்டைகள் அந்தப் பேச்சுவார்த்தையின் போது தகர்ந்ததாகவும், மூன்றே மாதத்தில் (டிசம்பரில்) அமைதிப்படை இந்தியாவுக்குத் திரும்பிவிடும் என்று தாங்கள் நம்பியதாகவும் எழுதினார் ஹர்கிரட்சிங். அந்த நம்பிக்கை பொய்த்துப் போனது. மூன்று மாதத்துக்கு பதிலாக, மூன்றாண்டுகள் பிடித்தது இந்தியப் படை திரும்புவதற்கு! அதற்குள் துணைக்கண்டத்தின் ராணுவம் கடுமையான இழப்புகளையும் அவமானங்களையும் சந்திக்க நேர்ந்தது.

16ம் தேதி நடந்த சந்திப்பின் முடிவில், தவறான சில அபிப்பிராயங்கள் தலைதூக்கின. அன்று காலையில் அமைதிப்படை அதிகாரிகளுடன் ஹெலிகாப்டரில் பலாலிக்கு வந்த பிரபாகரன், தீட்சித்துடனான சந்திப்புக்குப் பிறகு, பலாலியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தனது சொந்தப் பாதுகாப்பில் திரும்ப விரும்பினார். அவர் சொன்னதை ஏற்று, கனிவுடன் வழியனுப்பினார் ஹர்கிரட்சிங். அது தீட்சித்துக்கு எந்த அளவுக்கு எரிச்சலூட்டியது என்பதை அப்போது அவர் உணரவில்லை.



பலாலியிலிருந்து திரும்பியபிறகு, ஹர்கிரட் சிங் பற்றி டெல்லிக்குப் புகார் அனுப்பினார் தீட்சித். ‘அமைதிப்படை அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தயாராக இல்லை. மாறாக பிரபாகரனுக்குத் தனி மரியாதை தருகின்றனர். அவருக்கு சல்யூட் கூட செய்கிறார்கள். 54வது டிவிஷன் GOC ஹர்கிரட்சிங்கை மாற்றாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும்’ என்றெல்லாம் தீட்சித் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. களநிலவரத்தை உள்ளது உள்ளபடி ஹர்கிரட்சிங் எடுத்துச் சொல்ல, அதற்கு நேர்மாறாக, ராஜீவ்காந்திக்குத் தவறான தகவல்களை வழங்குவதிலேயே தீட்சித் குறியாயிருந்திருக்கிறார். இதிலிருந்து, வடகிழக்கில் அமைதி திரும்பிவிடக் கூடாது என்று விரும்பிய பௌத்த சிங்கள அரசின் ஏஜென்ட் போலவே தீட்சித் செயல்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. ராஜீவ்காந்தியின் அரசு இதைப் புரிந்துகொள்ளவில்லை.

மறுநாள், 17ம் தேதி, புலிகளின் தளபதிகள் ஹர்கிரட்சிங்கைச் சந்தித்தனர். திலீபனின் கோரிக்கைகள் குறித்து அவரிடம் விளக்கினர். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதையே அவர் வலியுறுத்துகிறார் என்பதை எடுத்துக் கூறினர். அதையும் கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனர் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்துகிறார் ஹர்கிரட்சிங்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# கனடா–இந்தியா முறுகல் நிலை: தர்மசங்கட நிலையில் மேற்குலகம்

கனடாவில் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து சீக்கியபிரிவினைவாதியானஹர்தீப்சிங்நிஜார் *(Hardeep Singh Nijaar)* கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருக்கிறது என்று கடந்த திங்கட்கிழமை கனடா முன்வைத்த குற்றச்சாட்டு, பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு மிகவும் அசௌகரியமான ஒன்றாகவும், அதே வேளையில் அந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ள நேரமும் அந்த நாடுகளு க்கு மிகவும் சங்கடமானதொன்றாகவும் மாறியிருக் கிறது. இந்தியா இந்தக் குற்றச்சாட்டை அறவே மறுத்திருக்கிறது. மிகவும் விரைவாக வளர்ந்து வரும் சீனாவுக்கு எதிரான மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அரணாக இந்தியா விளங்குவதால் இலண்டன், வோஷிங்டன், கன் பெறா போன்றவை புதுடெல்லியுடன் உறவைப் பேணுவதை முக்கியமாகக் கருதுகின்ற அதே வேளை, ரஷ்யா உக்ரேனை ஆக்கிரமித்த பின்னர் ரஷ்யாவை பொருண்மிய ரீதியாகத் தனிமைப் படுத்துவதற்கும் இந்தியாவை ஒரு முக்கிய நாடாக அவை பார்க்கின்றன.



பிரெக்சிட்டுக்குப் பின்னரான ஒரு ஒப் பந்தத்தை இந்தியாவுடன் அடுத்த மாதமே மேற்கொள்ள பிரித்தானியாவும் தயாராகி வருகிறது. கனடாவின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்ற அதே நேரம் இந்தியாவுடனான தங்கள் பேச்சுவார்த்தைகளும் தொடரும் என்று டவுணிங் தெரு *(Downing Street)* தெரிவித்திருக்கிறது.

இது இப்படியிருக்க, 2017ம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்ட நான்கு நாடுகளைக் கொண்ட அமைப்பான குவாட் *(Quad)* அமைப்பிலும் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தியாவுடன் இணைந்திருக்கின்றன.

"கனடாவின் விசாரணைகள் ஒரு தெளிவான முடிவை அடையும் மட்டும், தற் போதைக்கு, பொறுத்திருந்து பார்ப்போம் என்ற அணுகுமுறையை எடுப்பதே மேற்குலக நாடு களுக்கு இலகுவானதாக இருக்கும்" என்று ஐஐஎஸ்எஸ் என்ற சிந்தனைப் பள்ளியில் *(IISS think-tank)* தென்னாசிய ஆய்வாளராகப் பணியாற்றுகின்ற விராஜ் சொலாங்கி *(Viraj Solanki)* தெரிவித்தார். தொடர்ந்து என்ன நடக்கின்றது என்பதை அவ தானித்த பின் இரண்டு நாடுகளுடனும் அவை தனித்தனியாகத் தொடர்புகொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




இவ்விடயம் தொடர்பாக தாம் அதிக கவலையுற்றிருப்பதாக, அமெரிக்காவும் அவுஸ் திரேலியாவும் சமகாலத்தில் தெரிவித்திருக்கிறது. கனடா தற்போது தெரிவிக்கின்ற விடயங்களை ஐக்கிய இராச்சியம் பாரதூரமாகக் கருதுகிறது என்று கனடாவுக்கு அநுதாபமான வகையிலும், அதே வேளை எந்தவொரு பக்கமும் சாயாமல் மிகவும் அவதானமாகப் பிரித்தானியாவின் வெளிநாடுகளுக்கான செயலரான ஜேம்ஸ் கிளெ வளி கருத்துத் தெரிவித்தார். இதே நேரம் ஒட்டாவா முன்வைத்திருக்கின்ற குற்றச்சாட்டு மடமைத்தனமானது என்றும் ஏதோ ஒன்றை இலக்காகக் கொண்டது என்றும் இந்தியா தெரி வித்தது.

இங்கே சிக்கலுக்குரிய விடயம் என்னவென்றால், 'ஐந்து கண்கள் உறவு' *(Five Eyes Relationship)* என்று அழைக்கப்படும் அவுஸ்தி ரேலியா, கனடா, நியூசிலாந்து, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய ஐந்து நாடுகளைக் கொண்ட புலனாய்வு தொடர்பான கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருப்பதால், கனடா திரை மறைவில் கவனத்தில் எடுத்திருக்கும் சான்றுகள் மற்றும் புலனாய்வு தொடர்பான ஒரு தெளிவான விளக்கத்தைப் பெறுவதற்கு பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் காத்திருக்கின்றன.



இவை எவ்வாறிருப்பினும் "திங்கள் கிழமை நடந்த தாக்குதலுக்கும், இந்திய அரசுக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பகத்தன்மையுள்ள சான்றுகள் இருக்கின்றன" என்று கனடாவின் பிரதம மந்திரியான ஜஸ்ரின் ட்ரூடோ *(Justin Trudeau)* தெரிவித்திருப்பது மிகவும் பலமான ஒரு கூற்றாகும். ஜி 20 (G 20) மாநாடு இந்தியாவில் நடைபெற்று முடிந்ததன் பின்னர் ஒரு வாரம் காத்திருந்து ட்ரூடோ வெளியிட்டதில் இராஜீக அணுகுமுறை வெளிப்படுகிறது.

எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பது தான் தற்போதைய கேள்வியாகும். தொலை தூரத்தில் உள்ள ஒரு மேற்கத்தைய நாட்டில் நடந்த இந்த சம்பவத்தின் பின்னணியில், இந்தியா உண்மையில் இருக்கிறது என்று பகிரங் கமாக உறுதிப்படுத்தப்பட்டால், அது இந்தியாவை வேறொரு குழுவுக்குள் இணைத்து பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்று சத்தாம் இல்ல சிந்தனைப்பள்ளியின் *(Chatham House thinktank)* ஓர் தெற்காசிய நிபுணராகப் பணியாற்றுகின்ற சியெத் திஜ் பாஜ்பாயீ *(Chietigj)* தெரிவித்தார்.

ஒரு பொறுப்புவாய்ந்த பூகோள சக்தியாகத் தாம் பார்க்கப்படவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. ஜி 20 மாநாட்டை அண்மையில் கூட்டிய இந்தியா, தென்பூகோளத்தின் குரலாகத் தாம் விளங்க வேண்டும் எனவும் விரும்புகிறது. ஜமால் கசோக்ஜியைக் *(Jamal Khashoggi)* கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் சவூதி அரேபியாவைப்

தமிழில்: **ஜெயந்திரன்**

போலவோ அல்லது, சலிஸ்பெரியில் *(Salisbury)* நடைபெற்ற நச்சுக்கொலைகளின் சூத்திரதாரியான ரஷ்யாவைப் போன்ற நாடுகளைப் போலவோ தன்னையும் உலகம் பார்ப்பதை இந்தியா ஒரு போதும் விரும்பாது என்று அந்த ஆய்வாளர் சுட்டிக்காட்டினார்.

இங்கிலாந்தில் வாழும் தேசியவாதக் கொள்கையுள்ள சீக்கியர்களை இலக்கு வைத் திருப்பதாகவும், பாகிஸ்தானுக்கு எதிராகத் தவறான கொள்கைகளைப் பரப்புவதாகவும் இந்தியா மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்ற பின்புலத்தில், தமது நாட்டில் இந்தியாவின் புலனாய்வுச் செயற்பாடுகளை நீண்ட காலமாகவே பிரித்தானியா கண்காணித்து வருவதாக கடந்த காலத்தில் பிரித்தானியாவில் முக்கிய பணி களை ஆற்றியவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதே நேரம் இராஜீக அணுகுமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் இவ்விடயங்கள் வெளியரங் கமாகப் பேசப்படுவதில்லை எனவும் சொல்லப் படுகிறது.




அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி, வேறொரு நாட்டின் புலனாய்வுச் செயற்பாடுகளுக்கு உதவு வதும் குற்றமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் பார்க்கும் போது, இந்தியாவின் செயற்பாடுகளும் அவதானிக்கப்படுகின்றன.

இரண்டு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை தற்போது அதிகரித்திருக்கிறது. கடந்த ஜூன் மாதம் இன்னொரு சீக்கியப் பிரிவினைவாதியான அவ்தார் சிங் கண்டா, *(Avtar Singh Khanda)* தனது 35வது வயதில் லியூக்கேமியா *(leukaemia)* நோயின் காரணமாக பேமிங்ஹாம் மருத்துவமனையில் இறந்தார். அதனைத் தொடர்ந்து, நிஜார் தொடர் பாக ட்ரூடோ கருத்துத் தெரிவித்த பின்னர் தனது மகன் நஞ்சூட்டப்பட்டிருக்கிறார் என்று அவரது தாயான சரண்ஜீத் கவூர் *(Charanjeet Kaur)* குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இது எவ்வாறிருப்பினும், மேற்கு மிட் லான்ட் காவல்துறை *(West Midlands police)* அந்த நேரம் இவை தொடர்பாக விசாரணை செய்து, கண்டாவின் சாவு தொடர்பாக சந்தேகப்படக்கூடிய விடயங்கள் எதுவும் இல்லை என்ற அறிவிப்பை மேற்கொண்டது. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்களுக்கு என காலிஸ்தான் *(Khalistan)* என்று அழைக்கப்படும் தனியரசு உருவாக்கப்படவேண்டும் என்று நிஜாரைப் போல கண்டாவும் பரப்புரை செய்துவந்தார். இவர்கள் இருவருமே 'பயங்கரவாதிகள்' என இந்தியாவால்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# கனடாவிடம் சிக்கியுள்ளதா இந்திய உறவு அமைப்பு?

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான நீண்டகால பிரச்சனை தற்போது உச்சம் அடைந்துள்ளது. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தனிநாடுகோரி அங்குள்ள சீக்கியர்கள் மேற்கொண்டுவந்த போராட்டம் 1980களில் ஆயுதமோதலாக உச்சமடைந்தபோது அதனை அன்றைய இந்தியபிரதமர்இந்திராகாந்தி இராணுவத்தை கொண்டு அடக்கியிருந்தார்.

1984 ஆம் ஆண்டு பொற்கோயில் மீது மேற்கொள்ளப்பட்ட நீலநச்சத்திர படை நடவடிக்கையின் போது போராட்டக்குழுவின் தலைவர் பிந்திரன்வாலே உட்பட 400 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

அதற்கு பழிதீர்ப்பதற்காக 1984 ஆம் ஆண்டே இந்திய பிரதமர் இந்திராகாந்தி அவரது பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லபட்டிருந்தார். அதனை தொடர்ந்து இந்தியாவில் உள்ள சீக்கியர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றதை தொடர்ந்து பெருமளவான சீக்கிய மக்கள் இந்தியாவில் இருந்து புலம்யெர்ந்து செல்ல ஆரம்பித்தனர். அவ்வாறு சென்றவர்களில் பெரும்பாலானவர்களுக்கு கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அடைக்கலம் கொடுத்தன.



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திற்கு பின்னர் அதிக சிக்கிய மக்கள் வாழும் நாடாக கனடா உள்ளது அங்கு 770,000 பேர் வாழ்வதுடன், அவர்கள் கனடாவின் சனத்தொகையில் 2 விகித மாகும். தற்போதைய கனேடிய அரசிலும் அவர் களின் நான்கு அமைச்சர்கள் உள்ளனர்.

ஆனால் அங்கு சென்றவர்கள் தமது தாயகக் கோட்பாட்டை கைவிடவில்லை. கல்வி, பொருளாதாரம் மற்றும் அதிகாரம் ஆகிய துறை களில் தம்மை வலுப்படுத்திக் கொண்டு தமது தாயக மீட்புப்போரை அங்கிருந்தே மேற்கொண்டு வருகின்றனர்.

இது இந்தியாவுக்கு மிகப்பெரும் சிக்கலை தோற்றுவித்தள்ளது. காலிஸ்த்தான் விடுதலை என்ற இந்த நோக்கத்திற்காக பல அமைப்புக்கள் இயங்கி வருகின்றன.

அவர்களின் போராட்டம் கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தான் அதிகம். கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களின் முன்பான பஞ்சாப்பில் இந்திய அரசு மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போரட்டங்களை நடத்திவரும் இந்த அமைப்புக்கள் பல சந்தர்ப்பங்களில் இந்திய தூதரகங்கள் இந்து கோவில்கள் போன்றறன மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

இந்த அமைப்பில் உள்ளவர்களில் பலரை இந்தியா தடை செய்துள்ளதுடன் அண்மையில் கொல்லபப்பட்ட ஹர்தீப் சிங் நிஜாரின் கைதுக்கு உதவுவோருக்கு பணப்பரிசும் அறிவித்திருந்தது. இந்த நிலையில் தான் கடந்த ஜுன் மாதம் 18 ஆம் நாள் கனடாவில் உள்ள பிரிட்டிஸ் கொலம்பியாவில் வைத்து நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தனிநாட்டுக்கான உத்தியோகபூர்வமற்ற வாக் கொடுப்பை அவர் நடத்த முற்பட்ட வேளையில் கொல்லப்பட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சில்வர் நிற ரொயோட்டா காரில் வந்த முகமூடி அணிந்த இரண்டு நபர்கள் நிஜாரை அருகில் வைத்து பல முறை சுட்டுள்ளனர். இவை அனைத்தும் காணொளியில் பதிவாகியுள்ளது. இந்தியாவின் வெளியக உளவு அமைப்பான றோவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பவன்குமார் ராஜ் கனடாவில் உள்ள இந்திய தூதரகத்திற்கு புலனாய்வு அதிகாரியாக நியமிக்கப்பட்ட பின்னரே இந்த கொலை நிகழ்ந்துள்ளது.



அதாவது இஸ்ரேலின் பாணியில் வெளி நாடுகளில் வைத்து தனக்கு வேண்டாதவர்களை படுகொலை செய்ய இந்தியா முடிவெடுத்துள்ளது. இந்தியாவின் றோ அமைப்பு தனது அயல் நாடுகளான பாகிஸ்தான் பங்களாதேசம், இலங்கையில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தாலும் மேற்குலக நாடுகளில் களமிறங்கியிருப்பது இதுவே முதல் தடவை.

ஆனால் அது இந்தியாவை மிகப்பெரும் சிக்கலில் கொண்டுசென்றுவிட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை (18) நாடாளுமன்றத்தில் பேசிய கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ருடோ இந்த கொலையில் இந்தியாவுக்கு பங்குள்ளதாக தெரிவித்துள்ளார். கொலை இடம்பெற்ற 3 மாதங் களின் பின்னர் அவர் பேசியிருப்பது என்பது ஆதாரங்களை தெளிவாக திரட்டிய பின்னர் அதனை வெளிப்படுத்தியதாகவே கொள்ளப்பட வேண்டும்.



இந்தியாவுடனான வர்த்தக உடன்படிக் கையிலும் இருந்து வெளியேறிய கனடா அண் மையில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டிலும் இந்திய பிரதமரை சந்திப்பதில் கனேடிய பிரதமர் ஆர்வம் காண்பிக்கவில்லை. இரவு விருந்துபசாரத்தை புறக்கணித்த அவர் பின்னர் அவர் வந்த கனேடிய றோயல் வான்படையின் முதலாவது சிறப்பு விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சனை காரணமாக இரண்டு நாட்கள் இந்தியாவில் தங்க நேரிட்டது. அப்போதும் அவர் வெளியில்



வரவில்லை.

சிறப்பு விமானத்தில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறும் தற்போது மிகுந்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. இந்தியா தனது விமானத்தை வழங்க முனவந்தபோதும் ருடோ அதனை மறுத்துவிட்டார். ஜி-20 மாநாட்டில் இந்திய பிரதமர் மோடியுடன் அவர் நேரிடையாகவே இந்த கொலை தொடர்பில் பேசியதாகவும், ஆனால் அதனை மறுத்த மோடி கனடா இந்தியாவிற்கு எதிராக செயற்படுவதாகவும் கற்றம் சுமத்தியிருந்தார்.

இதனை தொடர்ந்து கனடாவுக்கு திரும்பிய ருடோ இந்தியாவை பகிரங்கமாக குற்றம் சாட்டியது மட்டுமல்லாது இந்திய புலனாய்வுத் துறை தலைவர் பவன்குமாரை நாட்டில் இருந்தும் வெளியேற்றியுள்ளார். அதற்கு பதிலடியாக இந்தியாவில் உள்ள கனேடிய இராஜதந்திரி ஒரு வரை வெளியேற்றியது இந்தியா.

எனினும் கனடாவின் விசாரணைகளுக்கு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## திலீபனின் ... தொடர்ச்சி ...

*19ம் தேதி, கொழும்பிலிருந்து இந்தியத் தூதரக துணை ஹைகமிஷனர் நிருபம் சென் பலாலி வந்தார். அவர், கள நிலவரத்தைப் புரிந்துகொள்ள வந்ததாகவே தெரியவில்லை. புலிகள் விஷயத்தில் அமைதிப்படை மென்மையான போக்கைக்கடைப் பிடிப்பதாக ஹர்கிரட்சிங்கிடம் நேரடியாகவே குற்றஞ்சாட்டுவது ஒன்றே அவரது நோக்கமாக இருந்தது. அதைச் சொல்லவே வந்ததைப் போலிருந்தது அவரது வருகை.*

*இந்தியஅரசின்கடுமையானநிலைப்பாட்டுக்கு முரணானதாக அமைதிப்படையின் அணுகுமுறைஇருப்பதாகநிருபம்சென்கடுப்படித்தபோது, உண்மை நிலவரத்தை அவருக்கு எடுத்துச் சொன்னார் ஹர்கிரட்சிங். 'ராணுவத்துக்கு உத்தரவிடுபவர்கள், அதற்கு முன் அதுகுறித்து நன்கு பரிசீலிக்க வேண்டும். பிரபாகரனுக்கு ராஜீவ் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இருதரப்புக்கும் இடையிலான கருத்து வேற்றுமைகளை நீக்குவது தான் இப்போதைக்கு முக்கியம்' என்று கூறினார் ஹர்கிரட்சிங்.*

*ஹர்கிரட் சிங்கின் வாதத்திலிருந்த யதார்த்தத்தை நிராகரித்த நிருபம்சென், உண்ணாவிரதப் போராட்டம் மூலம் இந்தியாவை யாரும் நிர்பந்திக்க முடியாது.. என்றார். அது, எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்த காந்தியின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியபோது பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் சொன்ன வார்த்தை. 'காந்தியின் விருப்பப்படி அவரைச் சாக விடுங்கள்... இறுதிச் சடங்குக்குத் தேவையான வேலையைப் பாருங்கள்' என்று சொன்ன சர்ச்சிலின் திமிருக்கும், நிருபம் சென் மற்றும் தீட்சித்தின் நடவடிக்கைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.*

*சர்ச்சிலின் அகந்தையைக் கண்டு கலங்காமல் இந்தியாவின் தேசத்தந்தை உண்ணாவிரதத்தைத் தொடர்ந்ததைப் போலவே, திலீபன் எதைக் குறித்தும் கலங்காமல் தன் நிலையில் உறுதியாக இருந்தான்.*

*அறப்போரின்நான்காவது நாளன்று திலீபன் எவ்வளவு உற்சாகமாக இருந்தானென்பதை, அவனுடனேயே இருந்த வாஞ்சிநாதன் குறிப்பிடுகிறார். 'விளக்கு அணையும் முன் பிரகாசமாக எரியுமாம்.. அதுபோல இன்று உற்சாகமாக இருக்கிறேன்...எனக்கு விடை தாருங்கள்.... இந்தப் போராட்டத்தைக் கைவிடும்படி யாரும் என்னைக் கேட்க வேண்டாம்... இதுவரை தாய்மண்ணுக்காக உயிர் துறந்திருக்கும் 650 விடுதலைப் புலிகளுடன் இணைந்து எம் தாய்மண் விடுதலை அடைவதை மேலிருந்து பார்ப்பேன்.... எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும்...' என்றான், எந்தக் கலக்கமும் இல்லாமல்!*

*உண்ணா நிலை அறப்போரைத் தொடங்கியபோதே, "தேசிய எழுச்சி எப்போதெல்லாம் குமுறியெழத் தொடங்குகிறதோ அப்போதெல்லாம் அதை அடக்க எமது எதிரிகள் ஒப்பந்தங்களுடன் வருகிறார்கள்.... இந்திய இலங்கை ஒப்பந்தமும் தமிழீழ மக்களின் விடுதலை வேட்கையை அடக்கி ஒடுக்குகிற முயற்சி தான்" என்று தெள்ளத்தெளிவாக விளக்கியவன் அவன்.*

*தண்ணீர் கூட அருந்தாமல் மேற்கொண்ட உண்ணா நிலை அறப்போரால் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்ட பிறகும், தன்னுடைய ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக இந்தியா எழுத்துப் பூர்வமாக உறுதியளிக்காதவரை, உண்ணாநிலை அறப்போரைக் கைவிடப் போவதில்லை - என்று உறுதியாகத் தெரிவித்தவன். பேச முடியாத நிலையிலும், இதை ஒவ்வொரு வார்த்தையாக கரகரத்த குரலில் திலீபன் சொன்னதாக வாஞ்சிநாதன் எழுதியிருப்பதைப் படிக்கிறபோதே. திலீபனின் மெலிந்த தேகமும், மெலியாத உறுதியும் நம் கண்முன் வருகின்றன.*

*கொடுத்த வாக்குறுதிகளுக்கும், செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கும் விரோதமாகவே இந்தியா தொடர்ந்து செயல்பட்டது. இந்த அளவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்கிற இந்தியா தன்னைக் காப்பாற்ற வாய்ப்பில்லை என்பதைத் திலீபன் உணர்ந்திருக்க வேண்டும். என்றாலும், தன்னுடைய மரணம் இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றக் கூடுமென்று அவன் நம்பியிருக்க வேண்டும். இன்னொரு கோணத்தில் பார்த்தால், திலீபனின் போராட்டம், ஈழத்தின் சுய மரியாதை தொடர்பானதாக மட்டுமே இருக்கவில்லை. இந்திய ராணுவத்தின் மாண்பையும் மரியாதையையும் காப்பாற்றும் நோக்கமும் அதற்கு இருந்தது.*

*திலீபனின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தால், விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காப்புப் படைக்கும் இடையே மோதல் வந்திருக்க வாய்ப்பேயில்லை. ஒரு துணைக்கண்டத்தின் ராணுவம் அவமானங்களைச் சந்தித்திருக்க நேர்ந்திருக்காது. இந்தியாவை நிஜமாகவே நேசித்தவர்கள் விடுதலைப் புலிகள். அதனால் தான், அதற்கு எளிதில் புரிகிற அகிம்சை மொழியில் பேசிப் பார்த்தான் திலீபன். இந்தியா அதைப் புரிந்துகொள்ளவில்லை, புரிந்துகொள்ள முயலவுமில்லை.*

*அதற்கு முந்தைய மாதம், ஆகஸ்ட் 4ம் தேதி பிரபாகரன் நிகழ்த்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதுமலை உரையிலும், இந்தியா தொடர்பான சிநேகப் பார்வை இருந்ததை இந்த இடத்தில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. பிரபாகரனை வீட்டுக்காவலில் வைத்துவிட்டு ஜெயவர்தனவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது.... பிரபாகரனின் ஆதரவே இல்லாமல் ராஜீவ்-ஜெயவர்தன ஒப்பந்தத்தை நடை முறைப் படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளை ஒட்டுமொத்தமாக ஓரங்கட்டித் தனிமைப்படுத்துவது..... டம்மி பொம்மைகளை வைத்தே காய் நகர்த்துவது....*

*இதுதான் ராஜீவ் காந்திக்குத் தவறான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தவர்களின் பிழையான வழிகாட்டுதலாக இருந்தது. உண்ணாநிலை அறப்போரைத் தொடங்கியபோது திலீபனுக்கு இருந்ததைப் போன்ற நம்பிக்கை, அப்போது பிரபாகரனுக்கும் இருந்தது. இந்தியா உண்மையைப் புரிந்துகொள்ளும் என்று நம்பிக் காத்திருந்தார். அவர் நினைத்ததுதான் நடந்தது.*

*ஒப்பந்தம் போடப்பட்ட பிறகு கூட அல்ல.. ஒப்பந்தத்துக்கு முந்தைய நாளே, பிரபாகரனின் சம்மதம் இல்லாமல் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாது என்கிற நிதர்சனத்தை ராஜீவ் புரிந்துகொண்டுவிட்டார். அன்று நள்ளிரவில் அவசர அவசரமாக பிரபாகரனை பிரதமர் இல்லத்துக்கு வரச்செய்து, நேரடியாகவே சில வாக்குறுதிகளை ராஜீவ் வழங்கியதற்கு இந்தத் திடீர் ஞானோதயம் தான் காரணமாயிருந்திருக்க வேண்டும்.*

*ராஜீவுடனான சந்திப்பின்போது, எம்.ஜி.ஆரின் பிரதிநிதியாக உடனிருந்த தமிழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனுக்கும் பிரபாகரனுக்கும் இடையிலான உரையாடல், மறக்க இயலாத வரலாற்றுப் பதிவுகளில் ஒன்று. பேச்சுவார்த்தைக்கு இடையே, ' நீங்கள் எல்லா ஆயுதங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்று அவசியமில்லை' என்று ராஜீவ் ஆங்கிலத்தில் குறிப்பிட, அதை பிரபாகரனுக்கு மொழிபெயர்த்த பண்ருட்டி 'இந்தியா உங்களுக்குக் கொடுத்த ஆயுதங்களில் பயனற்ற துருப்பிடித்த ஆயுதங்களை ஒப்படைத்தாலே போதும்' என்று மேலதிகமாக எடுத்துச் சொல்ல, அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பிரபாகரன், நறுக்குத் தெறித்ததைப் போல் நான்கு வார்த்தை சொன்னார். 'இந்தியா எங்களுக்கு வேறென்ன கொடுத்தது' என்கிற பிரபாகரனின் உடனடி பதிலடி, அவரது ஸ்மார்ட் பவருக்கான இன்னொரு சான்று.*

*பிரபா அப்படிக் கேட்டதும் பண்ருட்டியாரின் முகம் மாறிவிட, அதைக் கவனித்த ராஜீவ் 'என்ன சொல்கிறார்' என்று கேட்க, பிரபாகரன் சொன்னதை பாலசிங்கம் ஆங்கிலத்தில் விவரிக்க, அதைக் கேட்டு ரசித்துச் சிரித்திருக்கிறார் ராஜீவ்காந்தி. பிரபாகரன் என்கிற இளந் தலைவனின் Sharp Reaction நிச்சயம் அவரை வியப்பில் ஆழ்த்தியிருக்கும்.*

*பிரபாகரன் என்கிற சமரசமற்ற போராளி, ராஜீவின் முகத்துக்கு நேராக ஒன்றும், முதுகுக்குப் பின்னால் வேறொன்றும் பேசுகிற சாமர்த்தியசாலியாக இருக்கவில்லை. பிரபாகரனின் முகத்துக்கு நேராக வெளிப்படையாகத்தான் பேசினார். அவரிடம் சொன்னதைத்தான், சுதுமலை கூட்டத்தில் பேசினார்.*

*இந்தியாவை நம்பி ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் - என்று மக்கள் வெள்ளத்துக்கிடையில் நின்று பகிரங்கமாக அறிவித்ததோடு நின்றுவிடவில்லை பிரபாகரன். கூடவே, இந்தியாவின் பொறுப்பை, தெள்ளத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.*

*'எம் மக்களின் பாதுகாப்புக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்தியாவிடம் ஒப்படைக்கிற இந்தக் கணத்திலிருந்து எம் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம்... ஆயுத ஒப்படைப்பு என்பது பொறுப்பு கைமாறுவதையே குறிக்கிறது...'*

*ஹிட்லர் போன்று கையைக் காலையெல்லாம் ஆட்டி அங்க சேட்டைகளுடன் பேசுகிற தலைவர்கள் பலரை வரலாற்றில் பார்த்திருக்கிறோம். அவர்களது பேச்சின் பெரும்பகுதி வெற்று வார்த்தை ஜாலமாகவே இருக்கும். அப்படியெல்லாம் பேசத்தெரியாத பிரபாவின் இந்த சுதுமலை வார்த்தைகள் ஒவ்வொன்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. இதை விடச் சுருக்கமாக இந்தியாவுக்கு அதன் கடமையை நினைவூட்ட வேறெவரால் முடியும்!*

*திலீபனும் அப்படித்தான். தன் தலைவனைப் போலவே சுருக்கமாகப் பேசினான். உள்ளதை உள்ளபடி எடுத்துச் சொன்னான். மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த நிலையிலும் தடுமாற்றமில்லாமல் உறுதியாகப் பேசினான்.*

*"நான் இறப்பது நிச்சயம்... மில்லரைப் போலவே என் தாய்நாட்டுக்கான கடமையை நான் செய்து முடித்திருக்கிறேன்... எமது மக்கள் என்றாவது ஒருநாள் தமது விடுதலையை வென்றெடுப்பார்களென்று உறுதியாக நம்புகிறேன்... "*

*இந்த நம்பிக்கையுடன்தான்மரணத்தைத் தழுவினான் திலீபன். கனவல்ல அது. நிஜம். பொய்மை நெருப்பால் சுட்டெரிக்க முடியாத நிஜம்.*

*பௌத்த சிங்கள இனவெறிக்கு தொடர்ந்து இரையாகி வந்தவர்கள், அப்பாவித் தமிழ் மக்கள். அவர்களுக்குத் துணை நிற்காமல், இனவெறி இலங்கைக்குத் துணைபோனது ராஜீவின் அரசு. அது, இந்திய ராணுவத்துக்கு மிகப்பெரிய தலைக்குனிவை ஏற்படுத்தியதில் போய் நின்றது. இப்போதும் இந்தியாவின் பிழையான நிலைப்பாடு பெரிதாக மாறிவிடவில்லை. தமிழரின் பூர்விகத் தாயகமான ஈழ மண்ணில் ஒரு மிகப்பெரிய தமிழின அழிப்பை இலங்கை ராணுவம் செய்துமுடித்த பிறகும், கள்ள மௌனம் சாதிக்கிறது இந்தியா. இனப்படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் காக்க 14 ஆண்டுகளாக தொடர்ந்து முயல்கிறது. இது இந்தியாவை எங்கே கொண்டுபோய் நிறுத்தப் போகிறதென்பது தெரியவில்லை.*

*1987ல், கொழும்பில் இருந்துகொண்டு செய்த துரோகத்தை, இன்று ஜெனிவாவில் இருந்து கொண்டு செய்கிறது இந்தியா. வித்தியாசம் இது தான்! இனப்படுகொலைக் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதே அதன் அதிமுக்கிய வேலையாக இருக்கிறது. இந்தத் துரோகத்தையும் மீறி, இனப்படுகொலைக்கு நீதி பெற தமிழினத்தால் முடியும். அப்படிப் பெறுகிற நீதி, திலீபன் உள்ளிட்டோர் கனவு கண்ட தமிழீழத்தை நடை*

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## சிதைக்கப்படும் ... தொடர்ச்சி ...

கம்பனி தரப்பினர் கருத்து தெரிவிக்கின்றனர். இந்நிலையில் உலக சந்தையில் தேயிலையின் விலை உயர்ந்தபோதும் கம்பனியினரின் பஞ்சப் பாட்டுக்கு குறைவிருக்கவில்லை. தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தை வழங்க வாய்ப்பிருந்தும் கம்பனியினர் அதனை மூடிமறைக்கவே முற்படுகின்றனர் என்று தொழிலாளர்கள் விசனம் தெரிவிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனிடையே இலங்கையில் 2050ம் ஆண்டளவில் பெருந்தோட்டத்துறையை இல்லாமல் ஆக்குவதற்கு தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. எனவே பெருந்தோட்டங்களை சிறுதோட்டங்களாக்கி மலையகத் தமிழ் மக்களிடையே பகிர்ந்தளிக்கும் தீர்க்கமான அரசியல் நிலைப்பாடு அவசியமாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான எம்.திலகராஜா தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையில் தேயிலைத்துறையை பொறுத்தமட்டில் 75 சதவீத பங்களிப்பு சிறுதோட்ட உரிமையாளர்களால் வழங்கப்படுகின்ற அதேவேளை 25 சதவீத பங்களிப்பை பெருந்தோட்டத் துறை வழங்குகின்றது. இந்நிலையானது எதிர் வரும் 2050ம் ஆண்டு காலப்பகுதியில் 100 சதவீதம் சிறுதோட்ட உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்க தேசிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. 2050 வரை தற்போதைய அரசியல் செல்நெறியே கடைபிடிக்கப்படுமானால் அது முற்றுமுழுதான தோல்வியிலேயே போய் முடியும். மலையக மக்களின் பறிக்கப்பட்ட குடியுரிமையை மீளப் பெற்றுக் கொண்டாலும் அது அர்த்தமுடையதாக இல்லை என்றும் திலகராஜா சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

பெருந்தோட்டத்துறை இல்லாமல் போவதென்பது பாரிய பின்விளைவுகளுக்கும் உந்துசக்தியாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை. இது அவர்களின் தொழிற்றுறையில் தாக்கத்தை ஏற்படுத்துவது ஒரு புறமிருக்க அவர்களின் இருப்பு மற்றும் அடையாளம் என்பனவும் கேள்விக்குறியாகும் அபாயமுள்ளது. பிழையான பதிவுகள், இடம் பெயர்வுகள் என்பவற்றால் மலையக மக்கள் ஏற்கனவே பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் பெருந்தோட்டத்துறையை இல்லாமலாக்க மேற்கொள்ளும் முயற்சிகள் அம்மக்களை அதளபாதாளத்திற்கே இட்டுச் செல்வதாக அமையும். அத்தோடு மக்களின் செறிவு சிதைக்கப்படுகையில் இம்மக்கள் சமூகத்தினரின் அரசியல், கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களும் கேள்விக்குறியாகும். எனவே சிறுதோட்ட உரிமையாளர்களாக இம்மக்களை உருவாக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதேயாகும். இது அம்மக்கள் காணியுரிமையைப் பெற்றுக் கொள்ளவும் அடிப்படையாகும்.

இதுவொரு புறமிருக்க இந்திய வம்சாவளியினர் இங்கு காலடி வைத்து 200 வருடமாகியுள்ள நிலையில் அம்மக்கள் இன்னும் கூடிய கரிசனையுடன் கல்வித்துறையில் நாட்டம் செலுத்துவதன் ஊடாக சவால்கள் பலவற்றையும் வெற்றி கொள்ள முடியும் என்று புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர். இதன் நம்பகத்தன்மையை மலையக மக்கள் புரிந்து செயற்படுதல் வேண்டும். அதேவேளை மாற்றுத் தொழிற்றுறை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவையும் மேலெழுந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

• • •

## ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

**கலை, விஞ்ஞான. பண்பாட்டு நிலையங்கள், வரலாற்றுச் சின்னங்கள், வைத்தியசாலைகள் உட்பட காயமடைந்தவர்களை பராமரிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிலையங்கள் மீது மேற்கொள்ளப்படும் உள்நோக்கங்கொண்ட கொடுந் தாக்குதல்கள்.**

5. **சாதாரணமாக சொத்துக்களை சூறையாடுதல் அல்லது வலிந்த தாக்குதலூடாகச் சொத்துக்களைச் சூறையாடுதல்.**

6. **அகவிதி 7 இன் பந்தி 2 (க) இன் பிரகாரம் மேற்கொள்ளப் படும் கட்டாயக் கருவேற்றல், வன்புணர்வு, பாலியல் அடிமையாக்குதல், மற்றும் கட்டாயக்கருக்கலைப்பு உட்பட நிகழ்த்தப்படும் பாலியல் அத்துமீறல்கள்.**

7. **பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளை போர் நடவடிக்கையில் ஈடுபடுத்தும் முயற்சிகள்.**

8. **தவிர்க்க முடியாத இராணுவக்காரணங்களுக்காக அல்லது பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அல்லாமல் உள்நாட்டு யுத்தத்தை காரணம் காட்டி மக்களை இடம்பெயர்த்தல்.**

9. **போராளியொருவரை துரோகத்தனத்தால் கொல்தல்.**

10. **கருணைகாட்ட மறுத்தல்.**

11. **மருத்துவத்துறைக்குரியதெனவோ அல்லது ஏனைய எந்தவொருவகையிலுமோ நியாயப்படுத்த முடியாத பரிசோதனைகளின்; ஊடாக மனிதர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தல் அல்லது உயிராபத்தை உருவாக்கும் தீவிரமான காயங்களை ஏற்படுத்துதல்.**

12. **யுத்தத்தின் போது சொத்துக்களை அழிக்க அல்லது கையகப்படுத்த தேவையில்லாத போதும் அவற்றை அழித்தல் அல்லது கையகப்படுத்துதல்.**

ஜெனீவா மற்றும் ரோம் நடைமுறை வரைபுகளின் ஊடாக மேற்கூறப்பட்ட விடயங்களே உள்நாட்டு போர்களின் போதான போர்க் குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அடுத்தவாரம் இனப்படுகொலை சம்பந்தமாகத் தெரிந்துகொள்வோமா நண்பர்களே!

**தொடரும்...**

## சிரியாவின் ... தொடர்ச்சி ...

திட்டமிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய அரபு உலகத்தின் வசந்தம் என்ற நடவடிக்கையை தொடர்ந்து சிரியாவில் இடம்பெற்ற மோதல்களில் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதுடன், சிரியாவும் தனிமைப் படுத்தப்பட்டிருந்தது. பல மில்லியன் மக்களும் இடம்பெயர்ந்திருந்தனர். ஆனால் இழந்த தனது பகுதிகளில் கணிசமான பகுதிகளை மீண்டும் கைப்பற்றிய சிரியா தற்போது அனைத்துலக தொடர்புகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

## சட்டத்தை ... தொடர்ச்சி ...

நடந்தப் பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடு களால் அநியாயமாக உயிர்களையும் உடமைகளையும் இழந்த அனு பவங்கள் இருந்தும் மீண்டும் அதே இன வெறுப்பு நிகழ்ச்சி நிரலை அரசியல் சுய நலத்திற்காக மீண்டும் கையில் எடுக்கின்றார்கள்.

தியாக திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தை நிறுத்துவதாயின் நீதிமன்ற கட்டளையினை பெற்றிருக்க வேண்டுமே தவிர காடையர்களைக் கொண்டு வழி மறித்து தாக்குதலை நடத்த அனுமதிக்க முடியாது.

இதே போன்று தான் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தின் மீதும் அவர்களின் உடமைகள் மீதும் பள்ளிகள் மீதும் எந்த ஒரு அடிப்படையும் இன்றி அரசியல் இலாபங்களுக்காக பெரும்பான்மை காடையர்களைக் கொண்டு தாக்குதல்களை நடாத்தினார்கள்.

இவ்வாறான தாக்குதல்கள் குறித்து பல்வேறு முறை பாடுகள் செய்யப் பட்டிருந்தும் குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இனங்களிடையே ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் நிலை நாட்டுகிறோம் என ஐ.நா வரை கூச்சலிடும் ஆட்சியாளர்கள் சட்டத்தையும் நீதியையும் குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு மாத்திரம் விலக்களிக்கப்பது மனித உரிமை மீறல்களாகும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது தாக்குதல் நடாத்திய காடையர்களின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதோடு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தமிழ் தேசிய ... தொடர்ச்சி ...

இந்த போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த போராட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு அமைப்புகள் ஆதரவு தெரிவித்துவருகின்றன. எனினும் இந்த போராட்டத்திற்கான மக்கள் மயப்படுத்தல் என்பது இல்லாத நிலையே இருந்துவருகின்றது.

கால்நடை பண்ணையாளர்கள் மட்டுமே தமது நியாயமான கோரிக்கைக்காக போராடி வரும் நிலையில் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையிலான போராட்டங்கள் நடைபெறவில்லை யென்பது கவலையான விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இன்று வடகிழக்கினைப்பொறுத்த வரையில் பாதிக்கப்பட்ட சமூகம் மட்டுமே போராட வேண்டிய நிலை காணப்படுகின்றது. போராட்டங்கள் சமூகமயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை. இதன்காரணமாகவே போராட்டங்கள் அதிகளவில் வெற்றியடையாத நிலைமை காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வெறுமனே கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைகளாகமட்டுமேஇந்தபோராட்டத்தினை பார்க்கின்றது.

அத்துடன்தமது அரசியலைகாட்டுவதற்கும் முற்படும் நிலைமையே காணப்படுகின்றது. ஆனால் மக்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்கு ஆதரவாக போராடும் நிலைமையினை காணமுடியவில்லை. அவர்களின் இயலாமையே அதற்கு காரணமாக அமைகின்றன.

கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் தமிழ் தேசிய அரசியலின் செயற்பாடுகள் மிகவும் கவலைக்குரியதாகவே மாறிவருகின்றது. சட்ட விரோத காணி அபகரிப்புகள் உட்பட பல்வேறு அத்துமீறிய செயற்பாடுகளை தடுப்பதற்கு அல்லது அதனை தடுத்து நிறுத்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களை நடாத்துவதற்கு திராணியற்றவர்களாகவேயிருந்து வருகின்றனர்.

வெறும் வாக்கு அரசியல் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றதே தவிர தமிழ் தேசியத்தினை தளமூன்ற செய்வதற்கான அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. இதன்காரணமாகவே இந்த அரசியல் மீது தமிழ் மக்கள் அதிர்ப்தியடையும் நிலைமையும் காணப்படுகின்றது.

எனவே கிழக்கினைப்பொறுத்த வரையில் சமூகமயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் அரசியல் செய்யப்படுதன் மூலமே எதிர்காலத்தில் கிழக்கின் இருப்பினை ஓரளவேணும் பாதுகாக்க முடியும் என்பதுடன் தமிழ் தேசிய அரசியலையும் பாதுகாக்கமுடியும்.

• • •

## கனடாவிடம் ... தொடர்ச்சி ...

இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் விடுத்த வேண்டுகோளால் சினமடைந்த இந்தியா கடந்த வியாழக்கிழமை (21) கனேடிய மக்களக்கான நுளைவு அனுமதியை இரத்துச் செய்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் பேசிய கனேடிய பிரதமர் தான் இந்தியாவை சண்டைக்கு இழுக்கவில்லை விசாரணைகளுக்கு ஒத்துளைக் கவே கோருகிறேன் என்று தெரிவித்துள்ளதுடன், கனேடிய மண்ணில் கனேடிய பிரஜையை அன்னிய நாடு ஒன்று படுகொலை செய்வது என்பது கனடாவின் இறைமைக்கு ஏற்பட்ட பங்கம் என தெரிவித்துள்ளார்.

ருடோ அமைதியாகவே காய்களை நகர்த்து கின்றார். ஆனால் இந்தியாவின் பதற்றம் என்பது இந்தியா மிகப்பெரும் சிக்கலில் மாட்டியிருப்பதை உணர்த்துகின்றது.

அதேசமயம் பிரித்தானியாவில் பெர்மிங்கம் பகுதியில் இயங்கிவந்த காலிஸ்த்தான் விடுதலைப் படையினர் தலைவர் தனது 35 ஆவது வயதில் இரத்தப்புற்றுநோய் வந்து ஜுன் 10 ஆம் நாள் திடீரென இறந்ததும் இந்திய உளவு அமைப்பின் வேலைதான் எனவும் அதனை பிரித்தானியா விசாரணை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது தன்னை ஒரு இஸ்ரேலிய மொசாட்டாக நினைக்கும் இந்திய உளவுப் படையின் நடவடிக்கைக்கு கனடாவின் நட வடிக்கை மிகப்பெரும் பின்னடைவாக அமையப்



போகின்றது.

அமெரிக்காவின் புலனாய்வுத்துறையுடன் இந்த கொலை தொடர்பில் மிக நெருக்கமாக தாங்கள் செயற்பட்டுவருவதாகவும் கனேடிய பிரதமர் இது தொடர்பில் பிரித்தானியா மற்றும் அமெரிக்க தலைவர்களுடன் பேசியுள்ளதாகவும்இ தற்போது நியூயோர்க்கில் இடம்பெற்றுவரும் ஐ.நா பொதுச்சபை கூட்டத்தின் போது தனியாக ஜி-7 தலைவர்களுடன் இந்த விவகாரம் பேசப் படவுள்ளதாகவும் கனடா தெரிவித்துள்ளது.

கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளை கொண்ட ஐந்து கண்கள் (Five Eyes) என்ற புலனாய்வு அமைப்பும் கனடாவுக்கான தகவல்களை திரட்டியுள்ளது. அவர்களின் தரவுகள் அல்லது கொலைக்கு உதவியவர்களின் தரவுகளின் அடிப்படையில் தான் ருடோ இந்தியாவை குற்றம் சுமத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கொலை உறுதிப்படுத்தப்பட்டால் சவுதி அரேபியா துருக்கியில் வைத்து அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவரை படுகொலை செய்தது போல, ரஸ்யா பிரித்தானியாவில் வைத்துதனது புலனாய்வு அதிகாரியை படுகொலை செய்தது போல இந்தியாவும் பார்க்கப்படும் என்பதுடன், இந்தியா உலகில் தற்போது இருக்கும் இடத்தில் இருந்து இந்த நாடுகளின் தரத்திற்கு கீழ் இறக் கப்படும். ஆனால் காலிஸ்த்தான் போராட்டம் ஓயப் போவதில்லை இந்தியாவுடன் இணைந்து அதனை அடக்கவேண்டும் என்றால் இந்த நாடுகள் அதனை முளையிலேயே கிள்ளியிருப்பார்கள்.

அவுஸ்திரேலிய பிரதமரும் கருத்தும் அதனை தான் சொல்கின்றது. அதாவது தனிநாடு கோருவது மக்களின் பேச்சுரிமை அதில் நாம் தலையிடமுடியாது என சொல்லியுள்ளார். அதாவது ஸ்கொட்லாந்து தனிநாட்டுக்கான வாக்கொடுப்பை நடத்த பிரித்தானியா அனுமதித்ததே தவிர தனி நாட்டுக்கான வாக்கெடுப்பை நடத்தியவர்களை பயங்கரவாதிகள் என கூறவில்லை

## கனடா - இந்தியா ... தொடர்ச்சி ...

பட்டியலிடப்பட்டிருக்கிறார்கள்.

இளம் வயதில் கண்டா இறந்தது துரதிட் டமானதும் கவலைக்குரியதுமாகப் பார்க்கப்படும் அதே நேரத்தில், பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் சறே நகரத்தில் உள்ள ஒரு சீக்கிய ஆலயத்துக்கு வெளியே முகமூடி அணிந்த கொலை ஞர்களால் நிஜார் சுட்டுக்கொல்லப்பட்டது சாமான் யமான ஒரு விடயம் அல்ல. கொலையைச் செய் தவர்களைக் கைதுசெய்ய முடியுமா அல்லது அவர்கள் மேல் வழக்கைத் தொடுக்க முடியுமா என்பதைக் கனேடிய காவல்துறை முடிவுசெய்ய வேண்டும்.

2018ம் ஆண்டில் சவூதி அரேபியா கசொக்ஜி யைக் கொலை செய்தது போன்று, இந்தியாவின் கரம் இந்தக் கொலையில் இருக்கின்றது என்று ஐயம் எதுவுமற்ற சான்றைக் கனடா பகிரங்கமாக முன்வைக்குமாக இருந்தால், இந்தியாவுக்கும் மேற்குலகத்துக்கும் இடையேயான உறவு பாதிக் கப்படும்.

“சவூதி உதாரணத்தைப் பொறுத்தவரையில், அரசின் பங்கு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப் பட்டது. ஒரு குறிப்பிட்ட காலம் அமெரிக்காவுக்கும் சவூதிக்குமான உறவு பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது. ஆனால் தற்போது அந்த உறவு பெரு மளவுக்குச் சீரடைந்திருக்கிறது. இந்தியாவுக் கும் அப்படிப்பட்ட ஒரு நிலை தான் ஏற்படலாம். நிஜாரது கொலையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் தொடர்பு நிரூபிக்கப்படும் பட்சத்தில், நீண்டகால அடிப்படையில் இந்தோ-பசிபிக் கூட்டுமுயற்சியை அது பாதிக்கும் என நான் நினைக்கவில்லை” என்று பாஜ்பாயி தெளிவு படுத்தினார்.

**நன்றி: theguardian.com**

## ஈஸ்டர் ... தொடர்ச்சி ...

குறிப்பிடத்தக்க சர்வதேச அழுத்தம் இருந்தாலும் அரசாங்கம் அவ்வாறான ஒரு முடிவுக்கு வரலாம். இவற்றைவிட முக்கியமான மற்றொன்றும் உள்ளது. அரசாங்கத்தின் அரசியல் தேவைகள் நலன்களும் இதனைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்று!

சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள் வதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கையர் களிடையே ஒருமித்த கருத்து இல்லை. தாக்குதல் களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், எதிர்கால தாக்குதல்களைத் தடுக்கவும் சர்வதேச விசாரணை அவசியம் என்று சிலர் நம்புகிறார்கள். சர்வதேச விசாரணையானது இலங் கையின் இறையாண்மையை மீறுவதாகவும், அது நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் மற்றொரு தரப்பினர் நம்புகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சர்வதேச விசாரணையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா இல்லையா என்பதை காலம்தான் பதில் சொல்லும்.

• • •

## திலீபனின் ... தொடர்ச்சி ...

முறை சாத்தியமாக்கும். அப்படியொரு சூழலில், அதைத் தடுக்க இந்தியாவால் நிச்சயம் முடியாது. குறுக்கு வழியில் ஏதாவது செய்து தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்கும் வாய்ப்பைத் தடுக்க முயன்றால், இந்திய அமைதிக் காப்புப் படைக்கு ஏற்பட்ட அவமானத்தைக் காட்டிலும் கூடுதலான அவமானத்தை சர்வதேச அரங்கில் இந்தியா சந்திக்க நேரலாம்.

விடுதலை உணர்வும், சுய மரியாதையும் தமிழரின் ரத்தத்திலேயே ஊறியவை. தாய்மண்ணுக் காக தம்மையே கொடுக்கத் தயாராக இருக்கும் பேராண்மை தமிழினத்தின் பிதுரார்ஜித சொத்து. ஒரு உயிர் போனால், அடுத்த உயிர் அதற்குத் தயாராக இருக்கும். இந்த விடுதலைத் தாகத்தை இந்தியா எப்போது உணரப் போகிறதென்பது புரிய வில்லை.

திலீபனுக்கு வீரவணக்கம் செலுத்தியபிறகு, ‘ஒரு விடுதலை வீரன் சாவதில்லை...அவனது உயிராக இயங்கிவந்த லட்சிய நெருப்பு அணைந்து விடுவதில்லை....... ஒரு இனத்தின் தேசிய ஆன் மாவை அது தட்டியெழுப்புகிறது...’ என்றார் பிரபாகரன். இந்தியாவின் மனசாட்சியையும் அது தட்டியெழுப்பினால், வங்கக் கடல் சார்ந்த இந்தியா வின் பாதுகாப்புக்கு அது மிக மிக நல்லது.

இந்த யதார்த்தத்தை எடுத்துச் சொல்ல, ஹர்கிரட் சிங் போன்ற மனசாட்சியுள்ள அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். ‘இந்தியா நினைத்திருந்தால் திலீபனைக் காப்பாற்றியிருக்க முடியும்’ என்கிற அவரது குரலைப் போல், ‘இந்தியா நினைத்தால், ஈழத்தில் நடந்த இனப் படுகொலைக்கு நீதி பெற்றுக் கொடுக்க முடியும்’ என்று எடுத்துச் சொல்கிற ஒரு குரல் மிக மிக அவசியம். அது ஈழத்துக்கு மட்டுமின்றி, இந்தியா என்கிற காந்தி தேசத்துக்கும் மரியாதையைத் தேடித்தரும். இந்தியா செய்த துரோகத்துக்குப் பரி காரமாகவும் அது இருக்கும்.

• • •

## கஸ்மீர் விடுதலை ... தொடர்ச்சி ...

வருடங்களின் பின்னர் சந்திக்கின்றேன் என்னை அதிகாரவர்க்கம் வெளியில்வர 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 4 ஆம் நாளில் இருந்து அனுமதிக்கவில்லை என அவர் தனது மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

## மக்கள் பெரு ... தொடர்ச்சி ...

கருப்பொருளில் சிறப்புரைகள் இடம்பெற்றன.

அதில் பங்கேற்று “நினை வெழுச்சி மாற்றத்திற்கான திறவு கோல்” எனும் தலைப்பில் கலைப் பீடம் - நுண்கலைத்துறை யின் முன் னாள் துறைத்தலைவர் கலாநிதி க. சிதம்பரநாதன் சிறப்புரை ஆற்றினார்.

## சர்வதேச நீதி ... தொடர்ச்சி ...

உறுதிப் படுத்து போன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்ட னர். வடகிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் இந்த போராட் டம் இடம் பெற்றுள்ளது. இதில் பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

## இலங்கை அர ... தொடர்ச்சி ...

விக்கிரமசிங்கவுக்கு ஓரளவுக்கு சாதகமானதாக உள்ளது என்று கூறலாம். ஆனால் நடைபெற போகும் தேர்தலில் ராஜபக்சக்களுடன் கூட்டுச் சேர்வது என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரம சிங்க எடுத்தால் அது அவருக்கு பாதகமாகவே முடியும்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இந்த காணொளி இலங்கை அரசியலில் அதிரடியான சில மாற்றங்களை செய்யக்கூடிய தன்மையை கொண்டிருக்கிறது என்பது வெளிப் படையாக தெரிகின்றது. அதேபோல ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் சர்வதேச விசா ரணை அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த காணொளி அமைந்துள்ளது.

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

தமிழ் இளையோர் அமைப்பினர், மக்களவை அமைப்பினர் ஆகியோர் ஆங்கில உரைகளை வழங்கியிருந்தார்கள்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற முழக்கத்தோடு போராட்டம் நிறைவு பெற்றது